அ. மார்க்ஸ்

74

கல்விப் பிரச்சனைகள்

...ய கல்விக் கொள்கை பற்றிய ஒரு பார்வை

0-,6x
N85
13438.

நமது கல்விப் பிரச்சினைகள்

— புதிய கல்விக் கொள்கை பற்றிய ஒரு பார்வை

அ. மார்க்ஸ்

தோழமை
ஒரு முன்னோடி நூல் வெளியீட்டு நிறுவனம்
20, கோதண்டபாணித் தெரு
குடந்தை — 612 001

தோழமை: 3 | 7 முதற்பதிப்பு: நவ. 85 □ பக்கங்கள்: 70 □ விலை: 4—50 □ உரிமை: ஆசிரியர்க்கு □ அச்சும் அமைப்பும்: அறிவானந்தர், குடந்தை □ முகப்போவியம்: த. சுந்தர் □ தொடர்பு முகவரி: 20, கோதண்டபாணித்தெரு குடந்தை—612 001

என்னை
ஓர் ஆசிரியனாய்ப்
பெருமிதங் கொள்ளச்செய்த
என் மாணவர்களுக்கு…

நமது கல்விமுறை ...

...மிதமிஞ்சிய போட்டியினால் பெரும் அளவுக்கு உழைப்பு வீணாவதுடன், மனிதர்களிடையில் சமூக உணர்ச்சி குன்றி விடுகிறது.

முதலாளித்துவத்தின் மிகக் கொடிய விளைவு இப்போது மனிதர்களின் இயலாமையை அதிகரிப்பதுதான் என்று நான் நினைக்கிறேன். நம் கல்வி முறை முழுவதையும் இக்கொடுமை பாதித்திருக்கிறது. போட்டி மனப்பான்மை இருந்தாலொழிய மனிதன் பிழைக்க முடியாது என்ற மனப் பான்மை மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. சொத்து சேர்ப்பதில் வெற்றி பெற்றாலொழிய அவனுடைய எதிர்கால வாழ்வு சுகமாக இருக்காது என்ற கருத்து மாணவர் உள்ளத்தில் இன்று புகுந்திருக்கிறது.

இக்கொடுமைகளை ஒழிப்பதற்கு ஒரே வழிதான் இருக் கிறது என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. சோஷலிசப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்துவதுதான் அந்த வழி, அதனுடன் இப்போதுள்ள கல்வி முறையும் மாற வேண்டும். சமூக லட்சியங்களில் மாணவர்கள் ஈடுபடுவதற்கான முறையில் அது மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

ஒருவருக்கு இயல்பாகவே அமைந்த திறனை வளர்ப்பதுடன் சுயநலத்திற்காக அதிகாரத்தையும் வெற்றியையும் தேடித் திரிவதற்குப் பதிலாக, "மற்றவர்களுடைய நல்வாழ்வுக்குப் பாடுபடுவதில் எனக்கும் பொறுப்பு உண்டு" என்ற உணர்ச்சியையும் ஒவ்வொருவரிடத்திலும் நமது கல்விமுறை ஏற்படுத்த வேண்டும்.

— **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

[நன்றி : "ஜனநாயக சோசலிஸம்"]

பதிப்புரை :

கழிபல ஊழிகளாகக் காலங்காலமாய்த் தொடர்ந்துவரும் தமிழ்ச் சமூக உருவாக்க வரன்முறைகள் மீது தனியொரு கண்ணோட்டமும அக்கறையுமிக்க சமூகவியலாய்வாளர் - கல்விநிபுணர் - பேராசிரியர் - தோழர் அ. மார்க்ஸ் அவர்கள். தன்முன்னே விரிந்து கிடக்கும் சமூகவியலாய்வுத் தளத்தில்.... பாரம்பரியமாய்த் தொடரும் முன்னோடிகளின் வழித்தடத்தில் தனது சுவடுகளைப் பாய்ச்சல்களாகத் தடம்பதித்து வருகிறார். அவரது கூரிய சமூகவிஞ்ஞான நோக்கும் - பாரிய கல்வியின் ஞானச் செழுமையும் - சீரிய பெருமித மிக்க பேராசிரியப் பணியும் அனைத்திற்கு மேலாக அரவணைக்குந் தோழமை கனிந்த நேரிய வாழ்முறையும் எம்மை மிகவும் பாதித்த மதிப்புமிக்க அமிசங்களாகும்.

☐

என்னைத் தடுத்தாட் கொண்ட ஞானாசிரியன் – என்னினிய தோழன அ மா அவரது இந்நூல் பற்றி இங்கே நான் எழுதப் புகுவதெலாம் 'ஆசைபற்றி அறையலுற்ற' வேடிக்கையே அல்லாமல் வேறென்ன?

☐

பூதாகரப்படுத்திய பேராரவாரத்துடன் 'தேசிய விவாத'த்துக்காக நமமுன் விடப்படுகிறது புதிய கல்விக்கொள்கை பறறிய அரசு ஆவணம். அதன் போலிமைகளைத் தோலுரிக்கவேண்டிய அவசரமும் - இலைமறையாய்ப் புரையோடும அதன் ஆபத்தான அறிகுறிகளை அம்பலப் படுத்தவேண்டிய அவசியமுமாக, அவரது சமூகப்

பொறுப்பினாலும் கல்வி அக்கறையாலும் இங்கே எச்சரிக்கையாய் எழுந்ததுதான் மார்க்ஸின் இந்தக் குரல். இது நமது கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக எழுதப் படுகிற ஓர் அறிமுகம் மட்டுமே. இன்னும் அவரிடமிருந்து மென்மேலும் ஆய்வுகள் தொடர்ந்துவரும், வரவேண்டும்.

□

எத்தகைய உருப்படியான திட்டத்தையும் முன் வைக்காமல் ஏலவே உள்ள சூழலைத் தக்கவைப்பதாகவும் - மென்மேலும் நம உரிமைகளைப் பறிப்பதாகவும் ஆகமொத்தத்தில் முற் போக்கு முலாம பூசப்பட்ட பிற்போக்கான சாராம்ச முடையதே இந்த ஆவணம். மேலும் இந்நூலில் நமக்குத் தெளிவாகின்றன பல உண்மைகள்.

ஆரம்பக்கல்வி முதல் உயராய்வுகள் வரை இங்கு கல்விச் சூழல் குழம்பிக்கிடக்கிறது. மென்மேலும் ஆரம்பக்கல்வி புறக்கணிக்கப்பட்டுவர மேற்கல்விகளுக்கான செலவினங்கள் கூடுதலாகி வருகின்றன. இதர நாடுகளோடு ஒப்பிடுகையில் இங்கே கல்விக்கான நிதி ஒதுக்கீடு குறைவு அக்குறைந்த பட்ச ஒதுக்கீடுகளும் ஆளும் வர்க்கத்திற்குச் சாதக மாயும் வெகுமக்களுக்குப் பாதகமாயுமே அமுலாகின்றன. ஒதுக்கப்படுகின்ற மானியங்களின் பெரும்பகுதியும் தனியார் துறையின் நிர்வாக ஊழலுக்கிரையாகிவிடுகின்றன. நிலப் பிரபுத்வ ஆதிக்கத்தைத் தக்க வைக்கும் நவீன உபாயங் களாகவும் — பகற்கொள்ளையடித்த படியே வள்ளல் வேடமும் போட வசதியானதாகவும் இங்கே தனியார் துறைக்கல்வி நிறுவனங்கள கையாளப்படுகின்றன. போர்க் குணத்தை மழுங்கடிக்கப் போராடும் ஆசிரிய-மாணவர்கள் மீது வரைதுறையற்ற வன்முறைகளை ஏவி விடுகின்றன நிர்வாகங்கள்.

வர்க்கமாய்ப் பிளவுண்ட சமூதாயத்தில் வகைப்படும் கல்வும் இரண்டே. ஆளும்வர்க்கம் திணிக்கும் கல்விஒன்று. முந்தைய கருத்துருவங்களைக் கேள்விக்குள்ளாக்கும் உண்மைக் கல்வி பிறிது. அரசின் அடக்குமுறைக் கருவிகளும் இரண்டு. படை அதிகாரவர்க்கம் நீதி—நிறுவனம் போன்ற நேரடியான அடக்குமுறைக்கல்வி முதல்வகை மறைமுகமான கருத்து நிலை அரசுக்கருவி மற்றவகை.

காலந்தோறும் உருவாகிவரும் புதிய முரண்பாடுகள்—சிக்கல்கள்—நெருக்கடிகள் இவற்றிற்கேற்பச் சமூக அழுத் தங்கள் மேலெழுகின்றன. அத்தருணங்களில் எல்லாம் நிலவி வரும் வர்க்க சமூக அமைப்பிற்குத் தக்கவாறே வெகுமக்கள் உளவியலைத் தகவமைக்கும் கருத்துநிலை சார் அரசுக் கருவியாகக் கல்விக் கொள்கையும் செலவாணியாகிறது. இத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாகத்தான் இன்றைய பு. க. கொ. மற்றிய அரசு ஆவணமும் அரங்கேற்றமாகிறது.

☐

அரசின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவநம்பிக்கைகளுச்கு எதிராக மத ரீதியிலும் கலாச்சார விழுமியங்கள் மூலமாக வும் மர்மப்பண்பேற்றப்பட்டு மறைமுக நடவடிக்கையாகக் கருத்தியல் அடக்குமுறை இங்கே தொடர்கிறது. ஏகாதி பத்தியங்களின் சந்தைக்காடாக முதலாளியச் சமூக அமைப்பு உருமாறும்போது 'தாயகத்தைக் காக்க' உயிர்த் தத்தம் செய்யும் ராஜவிஸ்வாஸிகளை அரசுக்காக உற்பவம் செய்யும் பிரடெரிக் பாஸ்டரின் சிவிக்கல்விக் கொள்கை பற்றி நூலாசிரியர் உள்ளே குறிப்பிடுகின்றார்.

ஆமிப்படித்தான் இட்லரின் உயிர்த்தெழுதல்களாகக் கழுகு பூமியின் நஞ்சிலே தோய்ந்தெழுந்த நவபாசிசக்கனாக்களாக சில வெளிப்பாடுகள்...

பாகம்பாகமாய்த் திரையுலாவரும் ரீகனின் ஆதர்சமான 'ரேம்போவின் முதல்ரத்த'மும் இதுதான்!

மக்கள்யுத்தப் பேராளிகளாம் கொரில்லாக்களுக்கு எதிராகப் பிராங் கேம்பர்கள் நடத்தும் நவ பாசிசப் பாசறையும் இதுவேதான்.

இன்னுமிங்கே இதே மூச்சில் அவதானிக்க வேண்டிய இன்னோரம்சம் இங்கே ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் பின்னாலும் ராஜராஜனின் சமாதியின் மீது ராஜ வம்சங்கள் கைகோக்கின்றன. உடன்பிறப்புக்களாயும் ரத்தத்தின் ரத்தங்களாயும் வியர்த்தமாய்... விழலுக்கிறையாகும் என் சக 'தமிழச்சாதி'யோ எஜமான விஸ்வாஸத்தோடு எடுத்ததெற்கெல்லாம் சர்வ சாதாரணமாய்த் தீக்குளிக்கிறது.

அரசு கட்டிலில் நேற்றிருந்த - இன்றிருக்கிற ராஜராஜனின் பேரன்மார்களோ முற்கூட்டியே தீக்குளித்துவிடாதீர்களென... என்னமோ 'இன்னைக்குக் குளிக்கவேணாம்' என்பதுபோல் அறிக்கைகள் விடுகின்றார்கள் —

☐

சரி......

உண்மையான கல்வி என்பது எது?

இதற்கு விடையாக...இறுதி முத்தாய்ப்பாக

இதோ தமிழன்பனின் 'யாழின் இடத்தில் வாள்...'

"படிப்பது என்பது கல்வியில் பாதியே
பிரயோகப் பதில்தான் மீதி நிரம்பும்

சரி என்பதைச் சார்ந்து நிற்பதும்
தவறு என்பதைத் தண்டித்து ஒழிப்பதும்
அறிவின் வளர்ச்சிக்கு அடையாளங்கள்.

எனவே
பூரண ஞானம் பொலிந்த மக்கள்
புதிய உலகின் கதவு திறக்கிறார்.

சமூக மாற்றத்தைச் சாத்தியப் படுத்தும்
கல்விக் கூடமே
புரட்சிப் படையின் பாசறை ஆகும்.

இனிமேல்தான்
கலைமகள் விழா என்றால்
ஆயுதபூஜை என்பது அர்த்தமாகும்"

என்றும் தோழமையுடன் தங்கள்



7—11–85

குடந்தை.

குறிப்பு: அவசர அவசியத்தால் தவிர்க்க இயலாமல் நேர்ந்து போன அச்சுப் பிழைகளுக்காக எம்மை மன்னிக்க வேண்டுகிறோம்.

முன்னுரை

சுமார் இரண்டாண்டுகட்கு முன்பு என்னுடைய வகுப்பில் பயின்று கொண்டிருந்த மாணவர் திரு. கோ. திருமேனி என்னை அணுகி, தான் மாணவர்களுக்காக ஒரு நகலச்சிதழ் தொடங்கப் போவதாகவும் அதில் 'நமது கல்விப் பிரச்சினைகள்' என்கிற தலைப்பில் தொடர்கட்டுரை எழுதித் தருமாறும் கேட்டார். எழுத்துத் துறையிலும் ஆசிரியர் இயக்கங்களிலும் ஆர்வமுள்ளவன் என்கிற வகையில் அவர் என்னை அணுகினார் என்றே கருதுகிறேன். நான் மகிழ்ச்சியுடன் ஒத்துக்கொண்டு நான்கு கட்டுரைகள் எழுதிக் கொடுத்தேன். மேலும் சில எழுதுவதாகவும் இருந்தேன். 'விடிவு' என்கிற அந்த இதழ் நான்கு மாதம் வெளி வந்தது. பின்னர் எல்லாச் சிறு பத்திரிகைகளைப்போலவே அதுவும் நின்றுபோனது. கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக நான் எழுதத் திட்டமிட்டிருந்த வேறு சில கட்டுரைகளும் நின்று போயின.

ஆரவாரமான அறிவிப்புக்களுடன் 'தேசிய விவாதத்திற்காக' விடப்பட்டுள்ள 'புதிய கல்விக் கொள்கை' பற்றிய கட்டுரை ஒன்றை எழுதுவதன்

அவசியம் குறித்து ஆசிரிய-மாணவ இயக்கங்களின் பால் ஆர்வமுடைய நண்பர்கள் சிலர் குறிப்பிட்டனர். ஏற்கனவே எழுதிய கட்டுரைகளை இதில் இணைக் கலாம் எனவும் கருத்துத் தெரிவித்தனர். புதிய கல்விக் கொள்கை குறித்த ஒரு கருத்தரங்கில் கலந்துகொள்ள இருந்த எனது தஞ்சை மருத்துவ நண்பரொருவருடன் இந்த ஆவணம் தொடர்பாக விவாதிக்க நேர்ந்த சூழலில் இந்நூலிலுள்ள புதிய கல்விக்கொள்கை பற்றிய கட்டுரைகளை எழுதத் தொடங்கினேன். குறைந்த செலவில் வெளியிட வேண்டிய அவசியத்தின் விளைவாகப் பழைய கட்டுரைகளைத் தனியே இணைக்க முடியவில்லை. எனினும், அவற்றின் சாராம்சத்தைக் கட்டுரைப் போக்கில் இணைத்துள்ளேன்.

ஒவ்வொரு புதிய சமுதாய உருவாக்கம் நிகழுக் போதும், சமூக அழுத்தங்கள் மிகும்போதும் அன் றைய ஆளும் வர்க்கம் கருத்துநிலை சார்ந்த அரசும் கருவியின் ஓரங்கமாக புதிய கல்விக் கொள்கை களை உருவாக்கி வந்துள்ளது. இது தொடர்பாக மிகவும் விரிவான ஆழமான ஒரு நூலே எழுதலாம். எழுதவேண்டும். எனினும் இந்த 'தேசிய விவாதச்' சூழலில் மாணவர்களையும் சாதாரண மக்களையும் மனதிற்கொண்டு அவசரமாக ஒரு சிறு நூலை வெளியிடும் வேளையில் இது சாத்தியமில்லை என்பதாலும் அதேசமயத்தில் இது பற்றிய ஒரு சிறு குறிப்புக்கூட இல்லாமல் இந்நூல் முழுமை பெறாது என்பதாலும் 'புதிய கல்விக் கொள்கையின்

அவசரமும் அவசியமும்' என்ற கட்டுரையையும் எழுதி இணைத்தேன்.

புதிய கல்விக் கொள்கை பற்றிய விமர்சனமாக மட்டும் அமைந்து விடாமல் நமது கல்விச் சூழல் பற்றிய ஒரு எளிய அறிமுகமாகவும் இந்நூலை அமைத்துள்ளேன். எனினும் 'மாணவர் போராட்டமும் அரசின் அடக்குமுறையும்', 'மாணவர் - ஆசிரியர் உறவு,' தாய்மொழியில் கல்வியின் அவசியம்' போன்ற விஷயங்கள் இதில் விரிவாகச் சொல்லப் படவில்லை தான்.

இந்நூல் வெளிவருவதில் பல்வேறு மட்டங்களில் காரணமாயிருந்த தோழர்கள் திருமேனி, டாக்டர் நரேந்திரன், டாக்டர் பா. சிவக்குமார், தோழமை பதிப்பாசிரியர் வே. மு. பொதியவெற்பன், அறிவானந்தர் முருகேசன் ஆகிய அனைவருக்கும் என் நன்றி.

17 - 10 - 85 அ. மார்க்ஸ்

தஞ்சை

அறிமுகவுரை

Dr. ப சிவக்குமார்

புள்ளி விவரம் ஒன்று.

1981-ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்குப்படி 6-முதல் 14-வயதுக்குள் உள்ள குழந்தைகள் 14 கோடியாம், இதில் 3 கோடி குழந்தைகள் பள்ளிக்கூடமே எட்டிப் பார்க்காதாம், மீதமுள்ள குழந்தைகளில் 63% தொடக்கப்பள்ளி அளவி லேயே நின்றுவிடுமாம். 77% குழந்தைகள் எட்டாம் வகுப்பு வரை கூட வருவதில்லை.

இந்தியாவில் இன்றைக்கு எழுத்தறிவில்லாத மக்கள் 32 கோடி பேர் என மற்றொரு செய்தி,

இந்தச் சூழ்நிலையில் எல்லா மக்களுக்கும் 'சர்வரோக நிவாரணியாக' புதிய கல்விக்கொள்கை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது, அந்தப் பிரகடனம் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டுமா ?

தொலைக்காட்சியில் அன்றாடமொரு பேட்டி விவாதம், வானொலியில் பேச்சு, செய்தித் தாளைத் திறந்தால் தலைமை அமைச்சர், மாநில அமைச்சர்கள், துணை வேந்தர்கள், கல்வி அதிகாரிகள், முன்னாள் அதிகாரிகள், இன்னாள் அதிகாரிகள் இவர்களின் கருத்துப் பிரச்சாரம், நாடெங்கும் விவாதம் நடப்பதுபோன்ற பாவனை காட்டும் 5 நட்சத்திர ஓட்டல் கருத்தரங்குகள்.

இவை போதாதா எனக் கேட்கலாம்.

இந்தப் பாணி பிரச்சாரங்கள் எந்தக் கருத்தைப் பிரதி பலிக்கும் என்று கூறவேண்டுமா ?

இந்தச் சூழ்நிலையில் பேராசிரியர் மார்க்ஸின் நூல் சரியான கோணத்தில் புதிய கல்விக்கொள்கையை அணுக முயல்கிறது.

இந்தக் கல்விக்கொள்கை ஒன்றும் திடீரென முளைத்துவிடவில்லை, சுருக்கம் கருதி ஒரேயொரு எடுத்துக்காட்டு.

உயர் கல்வித்துறையைப் பொறுத்தவரை ஜனநாயக அமைப்புகளின் குரல்வளையை நெறிக்கும் முயற்சிகள் சில கடந்த நான்காண்டுகளாகவே திட்டமிடப்பட்டன.

1981-ஆம் ஆண்டில் தேசிய காவல்துறைக் குழு (National Police Commission) வெளியிட்ட அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட கருத்துக்கள் கவனத்தில் கொள்ள வேண்டியனவாகும்.

"மாணவர், ஆசிரியர் மற்றும் பணியாளர் அமைப்புகளின் நடவடிக்கைகளில் வெளியே இருக்கும் அரசியல் பிரச்சினை களின் ஆதிக்கம் இருக்கக்கூடாது." (தேசிய காவல்துறை குழு அறிக்கை பக்கம் 19) ஏனிந்த கூப்பாடு? ஆசிரியர் களும், மாணவர்களும் நாட்டின் பலபகுதிகளில் அமைப்பு ரீதியாகத் திரண்டு போராடுவதை அபாயகரமானதாகக் கருதுகிறது ஆளும் வர்க்கம். அவர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணலாமே எனத் தோன்றும். ஆனால், காவல்துறைக் குழுவின் தீர்வு: "பல்கலைக் கழகங்களில் ஒழுங்கை நிர்வகிக்கும் அமைப்பின் ஒரு பகுதியாக தனிப்பட்ட பாது காப்புப்படை ஒன்று நிறுவப்படவேண்டும். பெரிய கல்லூரி களிலும் கல்லூரிகள் இணைக்கப்பட்டப் பல்கலைக் கழகங் களிலும் இதேபோன்று படை ஒன்று அமைக்கப்பட வேண்டும்"

[தே கா. து. கு. அ பக்கம் 21]

எதற்காக இந்தப் படை? அந்தந்த ஊர்களில் இருக்கும் காவல்துறை போதாதா?

போதாதாம், கல்வி நிறுவனச் சொத்துக்களைக் காக்க வேண்டுமாம் "ஆசிரியர், மாணவர், பணியாளர்கள் அங்கங்கேயே சந்திக்க" வேண்டுமாம்.

[தே. கா து கு. அ. பக் 21]

1982-ஆம் ஆண்டின் மத்திய பல்கலைக் கழக செயலாய்வுக் குழுவின் அறிக்கை ஒன்று மத்திய அரசாங்கத்துக்குத் தரப் பட்டது. இந்த அறிக்கையும் காவல்துறைக் குழுவின் அறிக்கைக்கு ஒத்தூதியது. பல்கலைக்கழக செனட் போன்ற அமைப்புகளில் தேர்தல் மூலமாக ஆசிரியர், மாணவர் நுழைவது தடுக்கப்பட்டால்தான் கல்வி நிறுவன அமைதி காக்கப்படும் என கவலைப்பட்டது. 1984-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியாவில் இருக்கும் அனைத்து பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாடு இந்த கருத்துக்களுக்கு வடிவம் தந்தது.

புதிய கல்விக்கொள்கை ஆவணம் இந்தக் கருத்துக்களின் சாரமாக என்ன கூறுகிறது:

> 'அரசியலகற்றல்' (Depoliticisation) என்ற தத்து வத்தை முன்வைக்கிறது. இது குறித்து முன்னேற்பாட் டுடன் கடந்த நான்காண்டுகளாகவே மத்திய அரசு செயல்பட்டதை மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் தெளி வாக்கும், ஆந்திர மாநிலத்தில் அவசரசட்டம் மூலம் பல்கலைக் கழக அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் பதவி நீக்கப்பட்டதும், நேரடியாக சிண்டிகேட் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவதை நீக்க தமிழ்நாட்டில் பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டங்கள் திருத்தப்பட்டது.

இந்த தத்துவத்தின் முன்னறிவிப்புகள், இது குறித்து ஆளும் வர்க்கக் குறிக்கோள் என்னவாக இருக்குமென மார்க்ஸ் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

"அரசியல் சாராத தூய கல்வி என்பது ஆளும் வர்க்கக் கோட்பாடுகளில் ஒன்று என்பதும் ஒவ்வொரு சொல்லுக்கும் செயலுக்கும் பின்னால் ஒரு அரசியல் ஒளிந்துள்ளது என்பதும் வெளிப்படை" என மார்க்ஸ் கூறுகிறார் (பக் 29)

தேசியப் பாடத் திட்டம் ஆகட்டும், முறைசாராக் கல்வி பயிலக் கூறப்படும் தொலைக்கல்வி (Distant Education) முறை ஆகட்டும் மையப்படுத்தப்பட்ட அமைப்பின் (Centralised Organisation) மூலம் இந்தியாவில் மொழி யாலும், பண்பாட்டாலும் வேறுபட்ட பல்வேறு தேசிய இனங்களை மத்தியஅரசானது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நினைக்கும் எண்ணத்தையே பிரதிபலிக்கின்றன. இந்த முயற்சிகளின் நோக்கங்களைப் புரிந்துகொண்டு நாம் எதிர்ப்புக் குரல் எழுப்ப வேண்டிய அவசியத்தை முதல் அத்தியாயத்தின் இறுதியில் ஆசிரியர் கூறுகிறார்.

புராதனக் கூட்டுடமைச் சமுதாயத்தில் கல்வி என்பது தனி நிறுவனமாக இல்லாத நிலையையும் பின்னர் வர்க்கமாகப் பிளவுண்ட சமுதாயத்தில் அரசின் அடக்குமுறைக் கருவியாக கல்வியும் விளங்கும் நிலையையும் இரண்டாம் அத்தியாயத் தின் தொடக்கப் பகுதிகள் விளக்குகின்றன.

"மெக்காலே அறிமுகப்படுத்திய ஆங்கிலக் கல்வியைக்கூட குமாஸ்தாக்களை உருவாக்கும் கல்வி என இயந்திர கதியில் விமரிசித்தொதுக்காமல் காலனிய ஆட்சியின் விளைவாக உருவான புதிய முரண்பாடுகள், நெருக்கடிகள், சமூக அழுத்தங்கள் ஆகியவற்றைச் சமனப்படுத்தும் கருத்துநிலை

சார்ந்த அரசு கருவியாக'' மெக்காலேயின் கல்விக் கொள்கையைப் பார்க்கவேண்டும் என மார்க்ஸ் குறிப்பிடுவது போல் (பக்கம் 41;

இந்த 'புதிய கல்விக் கொள்கையும்' இன்றைய இந்திய அரசின் கருத்துநிலையின் பிரதிபலிப்பாகக்கொண்டு ஆராய வேண்டியது அவசியமாகிறது,

எனக்குத் தெரிந்தவரை புதிய கல்விக் கொள்கை தொடர்பாக தமிழில் வெளியாகும் முதல் விமரிசன நூல் மார்க்ஸின் முயற்சி எனலாம் இந்த நூலின் இரண்டாம் அத்தியாயம் இன்னும் விரிவாக எழுதப்பட வேண்டிய பகுதி என்றாலும் இந்தச் சிறு நூல் புதிய கல்விக் கொள்கைத் தொடர்பாக முறையான கருத்து விவாதம் ஒன்றைத் தொடங்க உதவும் என்பதில் ஐயமில்லை,

இந்த நூலுக்கு அறிமுகஉரை எழுதும்படி நண்பர் பேராசிரியர் அ மார்க்ஸ் கேட்டபோது,முறையான கருத்து விவாதத்துக்கு முன்னுரை என நானும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டேன்.

நவம்பர் மாதத்துக்குள் விவாதம் முடிய வேண்டும் என அரசாங்கம் அவசரப்படுகிறது. உண்மையான விவாதம நாடெங்கும் இனிதான் தொடங்கப் போகிறது. ஆசிரியர் அமைப்புகள் இந்தக் கல்விக் கொள்கைத் திணிப்பை எதிர்க்க மக்களை அணிதிரட்ட வேண்டும்.

10 11 85 ப. சிவகுமார்

I

புதிய கல்விக் கோள்கை பற்றிய அரசு ஆவணம் - ஒரு பரிசீலனை

கடந்த சில மாதங்களாக ராஜீவ் காந்தியாலும், மத்திய கல்வி அமைச்சராலும் ஆரவாரத்துடன் பேசப்பட்டு வந்த பு, க, கொ. பற்றிய அரசு ஆவணம் வெளிவந்து விட்டது. ''கல்வியின் சவால் - ஒரு கோட்பாட்டுப் பார்வை'' என்கிற பெயரில் இந்த ஆவணத்தைச் சுமார் 119 பக்கங்களில் மத்திய கல்வி அமைச்சகம் தயாரித்து வெளியிட்டுள்ளது. இது ஒரு இறுதியான கொள்கை அறிக்கை இல்லை எனவும் ஒரு புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கு உதவுகிற ஒரு தேசிய விவாதத்திற்கான அடிப்படையான ஆவணந்தான் எனவும் (முன்னுரை, 4—3*) அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய விவாதத்தில் பங்குபெறுகிறவர்கள் முழுமையாக இதனைப் படிக்க மாட்டார்களோ என்ற அச்சத்தின் விளைவாகவோ என்னவோ 16 பக்கத்தில் இதன் சுருக்கம் ஒன்றையும் கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

மூல அறிக்கையை அதிகார வர்க்கம் தனது சாதுரியத்தையெல்லாம் குவித்துத் தயாரித்துள்ளது. சாராம்சமான விஷயங்களைக் காட்டிலும் பின்னணியாக அதிகச் செய்திகள் தரப்படுகின்றன. படிப்பவர்கள்

* இந்த நூல் முழுவதும் அடைப்புக் குறிக்குள் காணப்படும் எண்கள் என்பன அரசு வெளியிட்டுள்ள 'கல்வியின் சவால்' என்கிற ஆவணத்தின் பத்தி எண்களாகும்.

பின்னணிச் செய்திகளில் மயங்கி சாராம்சத்தைக் கோட்டை விடுவதற்கான வாய்ப்புக்கள் ஏராளமாக உள்ளன சமூகப் பொருத்தம் (4-95, 4-125), சமூக மாற்றம் (1-11), நிலப் பிரபுத்துவப் பண்புகள் (1-27) போன்ற முற்போக்கான சொற் பிரயோகங்களும், ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பது (1-12), தற்போதுள்ள கல்வித் திட்டத்திலுள்ள குறைபாடுகளை ஒத்துக்கொள்ளும் நேர்மை (2-24, 3-7, 3-44), மக்கள் பங்கேற்பு (3-11), அதிகாரப் பரவல் (4-131) தாழ்த்தப்பட்டவர்களும், பெண்களும் அதிக அளவில் கல்வியில் பங்கேற்கச் செய்தல் (4-85, 4-86) போன்ற முற்போக்கான நோக்கங்களைக் கூறுவதன் மூலமும் இந்த ஆவணத்திற்குக் கவர்ச்சி ஊட்டப்பட்டுள்ளது.

இந்தக் கவர்ச்சியில் மயங்கி இந்த ஆவணம் வலியுறுத்த முயலும்.

(1) கல்வியில் தனியாரின் ஆதிக்கத்தை அதிகரித்தல் (3-40, 3-45, 3-75),

(2) கல்விக்கும் வேலை வாய்ப்பிற்குமிடையே தொடர்பில்லை என்கிற பெயரில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் பொறுப்பிலிருந்து கழற்றிக் கொள்ளல் (3-62, 4-28),

(3) முறைசாராக் கல்வி, தொழில்சார் கல்வி, (Vocational Education) போன்றவற்றிற்கு முறைசார் கல்வியைக் காட்டிலும் முக்கியத்துவம் அளித்தல் (3-27, 3-28 (3-129, 4-13, 4-22).

(4) ஆசிரியர், மாணவர்களது அரசியல், சிவில் உரிமைகளைப் பறித்தல் (3-27, 3-28, 3-29).

(5) கல்வி அதிகாரங்களை மத்தியில் குவித்துக்கொள்ளல் (4-135),

(6) தேசிய இனங்களின் தனித்துவத்தைப்பற்றி மௌனம் சாதித்துக்கொண்டு தேசிய ஒருமைப் பாட்டை வலியுறுத்தல் (4-43, 4-44, 4-46, 4-97, 1-9, 3-26),

(7) மறைமுகமாக இந்தித் திணிப்பு, ஆங்கில மொழிக் கல்வி ஆகியவற்றிற்கு ஆதரவளித்தல் (4-45, 1-9),

(8) பாரம்பரியங்கள், விழுமியங்கள் என்ற பெயரில் இந்து-நிலவுடைமைக் கருத்துகளைக் கல்வியில் திணித்தல் (4-178),

என்பனபோன்ற இலை மறை காயாக திருப்பித் திருப்பி வலியுறுத்தப்படும் சாராம்சமான கருத்துக்களைப் படிப்போர் தவறவிடும் வாய்ப்புக்கள் ஏராளமாக உள்ளன. மொத்தத்தில் இந்தஆவணம் எவ்வளவு போலித்தனமாகவும் அதே தருணத்தில் விஷமத்தனமாகவும் உள்ளது என்பதைச் சமூகப் பொறுப்பும் கல்வியில் ஆர்வமுமுள்ளவர்கள் சுட்டிக் காட்டுவது அவசியமாகும். இவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

இதற்குமுன் இவர்கள்கூறும் தேசிய விவாதம் என்பது எத்தனை தூரம் போலியானது என்பதைச் சுட்டியாக வேண்டும். பு. க. கொ. உருவாக்கத்தில் ஆசிரியர், மாணவர், பெற்றோர் பங்கு இந்த ஆவணத்தில் வலியுறுத்தப்பட்டு உள்ளது (1-33). ரொம்பச் சரி. ஆனால் இந்த நகல் ஆய்வறிக்கையில் இவர்கள் எந்தஅளவிற்குப் பங்குபெற்றனர் என்பது தெரியவில்லை. முழுக்க முழுக்கக் கல்வி அமைச்சகத்தின் மேல்தட்டு அதிகார வர்க்கமே இதனைத் தயாரித் துள்ளது. இப்போது நடைபெறும் இந்தத் தேசிய விவாதங் களிலும் பெற்றோர்கள், ஆசிரியர் கழகங்களின் பிரதிநிதிகள் மாணவப் பிரதிநிதிகள் ஆகியோர் முறையாக அழைக்கப்பட வில்லை என்பது கவனிக்கத்தக்கது. முழுக்க முழுக்க

மற்றெல்லா அரசு நடவடிக்கைகளையும்போலவே முற்றிலும் இந்த விவாதம் சடங்கு ரீதியாகவும், அதிகார வர்க்கமும், கல்வியில் அக்கறையற்ற பெரிய மனிதர்களும் பங்குபெறும் 'விவாதங்களாக'வுமேஇது இப்போதுநாடெங்கிலும்நடத்தப் படுகின்றது. ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்களின் கருத்துக்களை எவ்வாறு தொகுத்து பு. க. கொ. உருவாக்கத் தில்பயன்படுத்தப் போகின்றார்கள் என்பதும் தெரியவில்லை இவர்களின் கருத்துக்கள் பற்றி ஆளும் வர்க்கம் கவலைப்பட வில்லை என்பதே எதார்த்தம். இதே போலத்தான் முற்போக்கான வார்த்தை வெல்லத்திற்குள் சாராம்சமான இன்னும்பல பேதி மாத்திரைகள் மறைத்து வைக்கப்பட்டு பு. க கொ. ஆவணம் என்ற பெயரில் மக்களிடம் திணிக்கப் படுகிறது.

இந்த ஆவணம் மொத்தத்தில் ஒரு விஷயத்தை ஒப்புதல் வாக்குமூலமாக ஏற்றுக் கொள்கிறது. ஆரம்பக் கல்வியிலிருந்து உயர் ஆய்வுகள் வரை இங்கு கல்விச் சூழல் குழம்பிக் கிடக்கிறது என்பதுதான் அது. (3.64). ஆனால், இந்த இழிவுகளிலிருந்து இந்தியக் கல்வியை மீட்கும் சரியான வழிமுறைகள் சுட்டிக் காட்டப் படவில்லை. எடுத்துக் காட்டாக கல்வி வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதில் பொருளாதார அடிப்படையிலும், சாதி அடிப் படையிலும், பிராந்திய அடிப்படையிலும் ஏராளமான ஏற்றத் தாழ்வுகள் இருப்பதாக நீலிக் கண்ணீர் வடிக்கிறது, ஆவணம் (4.85, 4.88). ஆனால், இந்த வேறுபாடுகளுக் கான காரணங்களும், அவற்றை நீக்குவதற்கான உருப்படி யான யோசனைகளும் எங்கும் காணப்படவில்லை. ஆனால் ''இந்த வேறுபாடுகள் மோசமான அளவிற்குப் போய்விடக் கூடாது (3.5) என்று மட்டும் கூறப்படுகிறது. இந்த ''மோசமான அளவு'' என்பதன் எல்லை என்னவோ தெரிய வில்லை. மொத்தத்தில் ''வேறுபாடுகள் இருக்கின்றன,

இருக்கத்தான் செய்யும், இந்த வேறுபாடுகளை நீக்குவது எளிதல்ல. இனி இந்த வேறுபாடுகளை வேண்டுமானால் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்வோம்'' என்கிற கருத்தை ஏற்படுத்துவதாகவே ஆவணம் அமைந்துள்ளது.

இதே போலத்தான் கிராமப்புற தொடக்கப் பள்ளி களில் உரிய வசதிகள் இல்லை என்கிற பிலாக் கணமும் (3,9). மொத்தக் குடியிருப்புக்களில் ஐந்தில் ஒரு பங்கில் ஆரம்பப் பள்ளி இல்லை. பள்ளி உள்ள கிராமங்களிலும் 40 சதவீதத் தில் கட்டிடங்கள் இல்லை, 39·72 சதவீதம் பள்ளிகளில் கரும்பலகை இல்லை. 59·50 சதவீதத்தில் குடிநீர் இல்லை 35 சதவீதம் பள்ளிகளில் ஒரே ஆசிரியர் எல்லா வகுப்புக் களையும் கவனிக்க வேண்டி இருக்கிறது என்கிறது ஆவணம் (3,7).

இந்த நிலைக்கான அடிப்படைக் காரணத்தையும் ஆவணம் கிட்டத்தட்ட ஏற்றுக் கொள்கிறது. ஓர் ஆண்டுக்கு ஒரு மாணவனுக்குக் கல்விக்காக ஒதுக்கப்படும் தொகை ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டே போகிறது என்கிறது ஆவணம் (3.10). இதற்குக் காரணம் நிதிப் பற்றாக் குறையும் சனத்தொகைப் பெருக்கமுமே என்றும் ஆவணம் குறிப்பிடுகிறது.(3,10, 3 17) ஆனால் ஆவணத்தின் இன்னொரு பகுதியில் வளர்ச்சியடைந்த, வளர்ச்சி யடையாத பல உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது கல்விக் காக ஒதுக்கப்படும் நிதி இந்தியாவிலேயே குறைவு எனவும் ஆவணம் ஒப்புக்கொள்கிறது (2.32), மொத்த தேசிய உற்பத்தியில் சுமார் 6 முதல் 8 சதம் வரை இதர நாடுகள் கல்விக்காகச் செலவழிக்கையில் இந்தியா 3 சதம் மட்டுமே செலவழிக்கிறது (2,32) உலக வங்கி தனது அறிக்கையில் பட்டியலிட்டுக் காட்டியுள்ள 125 நாடுகளில் இந்தியாவைக் காட்டிலும் கல்லாமை அதிகமுள்ள நர்டு 25 மட்டுமே என்பது தெரிகிறது. பர்மா, உகாண்டா, லாவோஸ் போன்ற நாடுகளைக் காட்டிலும் நாம் மோசம். வியட்நாம்

போன்ற அரசியல் ஸ்திரத் தன்மையும், பொருள் வளமும் குறைந்த நாடுகளில் கூட எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 87 சதமாக இருக்கையில் இந்தியாவில் 36 சதமே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இருக்கின்றார்கள் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது கல்வி இழிவுகளுக்குப் பொருள் வளம், சனத்தொகை போன்றவற்றைக் காரணமாகக் காட்டுவது உண்மைக்குப் மாறானது என்பது தெளிவு. 1951 இல் இந்தியாவில் இருந்த மொத்தம் படிக்காதவர்களின் எண்ணிக்கை 45 சதமாக இருந்தது என்பதும் இது 1971ல் 52 சதமாக உயர்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த உண்மைகளையும் கல்விக்கான நிதி ஒதுக்கீடு இங்கு குறைவு என்பதையும் நாம் இணைத்தே பார்க்கவேண்டும்.

இங்கு கல்வியைக் காட்டிலும் அதிகமாக ராணுவத்திற்குச் செலவிடப்படுகிறது. 1976 இல் இந்தியாவின் ராணுவச் செலவு 2157 கோடி ரூபாய். அதே ஆண்டு கல்விக்குச் செலவழிக்கப்பட்ட தொகை 1052 கோடிகள்தான். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள், விவசாயம், வாகனம், தொழில், சுரங்கம், போக்குவரத்து, தொடர்புச்சாதனம் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்ட தொகை 60025 கோடி ரூபாய். இந்த இனங்களில் செலவிடப்படும் தொகையனைத்தும் அந்நிய மூலதனத்தின் வளர்ச்சிக்கும் அதன் உள்ளூர் ஏஜண்டுகள் மற்றும் நிலப்பிரபுக்களிடம் செல்வம் குவிவதற்கும் மட்டுமே பயன்படும். எடுத்துக் காட்டாக விவசாயத்திற்காகச் செலவிடப்படும் தொகை எல்லாம் அந்நிய மூலதனத் தொடர்புடன் இயங்கும் பூச்சிக் கொல்லி மருந்துகள் உரங்கள் ஆகியவற்றின் விற்பனையை அதிகப்படுத்துவதாகவே அமைந்துள்ளன. அவற்றைப் பயன்படுத்த வாய்ப்புள்ள பெரும் நிலப் பிரபுக்களே அவற்றால் லாபமும் அடைகின்றனர். இப்படித்தான் மேற்குறிப்பிட்ட மற்ற துறைகளில் செலவிடப்படும் தொகையும் மக்களைச் சென்றடைவதில்லை.

ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்களைச் சென்றடையும் கல்வி, மருத்துவம், குடிநீர், சமூக நலம், பிற்பட்ட மற்றும் அரிசன நலம் ஆகிய துறைகளில் செலவழிக்கப்பட்ட தொகை 6480 கோடி ரூபாய் மட்டுமே. எனவே இங்கு திட்ட ஒதுக்கீடுகள் என்பன எவ்வாறு ஆளும் வர்க்கத்திற்குச் சார்பாகவும் மக்களுக்கு எதிராகவும் உள்ளது என்பது தெளிவாகிறது. சரி, மீண்டும் கல்விக்கு வருவோம்,

கல்விக்காக இவ்வாறு ஒதுக்கப்படும் குறைந்த தொகையும் எப்படிச் செலவழிக்கப் படுகிறது தெரியுமா? ஆரம்பக் கல்வி புறக்கணிக்கப்படுகிறது. உயர் கல்விக்கும், மருத்துவ, பொறியியல், தொழில் நுட்பப் படிப்பிற்கும் ஏராளமாகச் செலவிடப் படுகின்றன. ஆரம்பப் பள்ளி மாணவனுக்குச் செலவிடப்படும் தொகையைக் காட்டிலும் கிட்டத்தட்ட நாற்பது மடங்கு அதிகமான தொகையை ஒரு கல்லூரி மாணவனுக்கு அரசு செலவிடுகிறது. மருத்துவ, பொறியியல் படிப்பிற்குச் சொல்லவேண்டியதில்லை. திட்டத் திற்குத் திட்டம் ஆரம்பக் கல்விக்கு ஒதுக்கப்படும் தொகை குறைந்து கொண்டும், உயர் கல்விக்குச் செலவிடப்படும் தொகை அதிகரித்துக் கொண்டும் போவதை முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்விக்கான செலவினத்தில் ஆரம்பக் கல்விக்கான பங்கு 56 சதமாக இருந்தது. ஆறாம் திட்டத்தில் 20 சதமாகக் குறைந்தது எனவும் அதே தருணத் தில் பல்கலைக்கழகச் செலவினங்களின் பங்கு சுமார் 1·8 மடங்கு அதிகரித்தது எனவும் பு. க. கொ. ஆவணம் வாக்கு மூலமாக அளிககிறது (3-74).

இவ்வாறு ஆரம்பக்கல்வி ஏன் புறக்கணிக்கப்படுகிறது? உயர்கல்வி ஏன் ஊட்டி வளர்க்கப்படுகிறது?

இரண்டிற்கும் ஒரே பதில்தான். உயர்நிலையில்தான் கல்வி ஓரளவு பொதுவாக உள்ளது. அதாவது பெரும்பாலும்

மேல்தட்டு வர்க்கத்தினருக்குப் பொதுவாக உள்ளது. ஏழை எளிய மாணவர்களுக்கெனத் தனி நிறுவனங்களும் பணக்கார மாணவர்களுக்குத் தனி நிறுவனங்களும் உயர் கல்வியில் கிடையாது. ஆனால் ஆரம்பப் பள்ளியில் வசதி படைத்த வர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலக் கான்வெண்ட்களில் சேர்த்துவிடுகிறார்கள். பெருகிவரும் ஏகாதிபத்திய மோகத் தரகுக் கலாச்சாரத்தின் விளைவாக நடுத்தர வர்க்கத்தினரும் சிரமப் பட்டாவது தங்கள் பிள்ளைகளைக் கான்வெண்ட் களில் சேர்த்துவிடுகின்றனர்.

அங்கே அழகான கட்டிடம், சின்னச் சின்ன மேசை நாற்காலிகள், விளையாட்டு அரங்கம், தூய்மையான பாத்ரூம் எல்லாமிருக்கும். ஏழை எளிய மக்களும், கிராமப் புறத்து விவசாயிகளும் படிக்கிற பள்ளிகளில் 'ஒண்ணுக்கு' விட்டதும் மாணவர்கள் சாலை ஓரம் ஓடவேண்டியதுதான்.

ஆவணம் நீலிக் கண்ணீர் வடிக்கும் இன்னொரு விஷயம் கிராமப்புற, அடித்தட்டு மக்கள் மத்தியில் படிப்பை இடையில் நிறுத்தும் போக்கு (drop outs) அதிகம் இருக்கிற தென்பது (2–22). முறைசாராக் கல்வி மூலம் இப்பிரச் சினையைத் தீர்க்கமுடியும் எனவும் ஆவணம் பகர்கிறது. இது எவ்வாறு சாத்தியமில்லை என்பதைப் பின்னர் பார்ப்போம். வறுமை, பசி, சத்தற்ற உணவு, நோய், கல்வியில் ஆர்வமின்மை, தாழ்வு மனப்பான்மை, பணிவுடன் அணுக ஆதரவின்மை போன்றவற்றைப் படிப்பை இடையில் நிறுத்துவதற்கான காரணங்களாக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும், பெண்கள் மத்தியிலும் இடைநிறுத்தம் அதிகமாக இருப்பதை ஆவணம் உட்படப் பல்வேறு ஆய்வறிக்கைகள் நிறுவி யுள்ளன. இட ஒதுக்கீட்டின் மூலம் மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் கல்விக் குறைபாட்டை நீக்கிவிட முடியாது என்பதை ஆவணமும் ஏற்றுக்கொள்கிறது (4-86). பின் என்னதான் செய்ய வேண்டும்? இங்குதான் ஆவணம்

மௌனம் சாதிக்கிறது அல்லது பொருந்தாத் தீர்வுகளை முன் வைக்கிறது.

வறுமையும், குழந்தைகளைச் சம்பாதிக்க அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தமும், சமூக ஏற்றத் தாழ்வுகளும், நிலப் பிரபுத்துவ மதிப்பீடுகளும்தான் இடை நிறுத்தத்திற்குக் காரணம் என்பதால் முதலில் அவற்றை நீக்கவேண்டும். இதற்கு முதலில் உழுபவனுக்கு நிலம் என்கிற அடிப்படையில் நிலச்சீர்திருத்தத்தை நிறைவேற்றியாகவேண்டும். இதுபற்றி ஆவணம் மூச்சுவிடவில்லை.

இதேபோலத்தான் பெண்களின் கல்விப்பிரச்சினையும் பள்ளிகளில் சேரும் பெண் குழந்தைகளில் ஆரம்பப்பள்ளி அளவிலேயே 74 சதத்தினர் படிப்பை இடையில் நிறுத்தி விடுகின்றனர், ஆண் குழந்தைகளில் இவ்வாறு பாதியில் நிறுத்துவது ஒப்பீட்டளவில் குறைவு. பட்ட, பட்டமேற் படிப்பு அளவிலும்கூட படிப்பைப் பாதியில் நிறுத்துவ தென்பது ஆண்களைக் காட்டிலும் பெண்களிடத்தில் இரு மடங்கு அதிகம். கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் பெண்களில் பெரும்பாலோர் நகர்ப்புற மத்தியதர/உயர்வர்க்கப் பெண் கள்தான். இவர்களுங்கூட பெரும்பாலும் கலைக் கல்லூரி களில்தான் படிக்கின்றனரே யொழிய விவசாய, தொழில் நுட்பக் கல்லூரிகளில் படிக்கும் பெண்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. எடுத்துக்காட்டாக 1970-71இல் வெளி வந்த பெண் பட்டதாரிகளில் 53·2 சதம் கலைக் கல்லூரிப் பட்டதாரிகளாம். விவசாயப் பட்டதாரிகள் 0·4 சதம். சட்டப் பட்டதாரிகள் 3·7 சதம் மட்டுந்தான்.

மொத்தத்தில் பெண்களின் சனத்தொகையில் 81·3 சதம் பெண்கள் (சுமார் 218·3 மில்லியன்) எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். மீதியுள்ள 18·7 சதம் படித்த பெண் களிலும் 2·3 சதத்தினரே வேலையிலிருப்பவர்கள்.

2

பெண் கல்வி இவ்வளவு மோசமாக இருப்பதற்குக் காரணம் இங்குள்ள நிலப் பிரபுத்துவச் சூழலேயாகும். வரலாற்றில் நிலப் பிரபுத்துவ மதிப்பீடுகள் பெண் கல்விக்கு எதிராகவே இருந்து வந்திருக்கிறது. 1878 வரை பெண்கள் பல்கலைக் கழகங்களிலேயே அனுமதிக்கப்பட்டதில்லை. பெண்கள் திரண்டு போராட்டம் நடத்தியதன் விளைவாக 1878-ல் தான் லண்டன் பல்கலைக் கழகம் பெண்களை அனுமதித்தது. ஆக்ஸ்போர்டு, கேம்ப்ரிட்ஜ் போன்ற பல்கலைக் கழகங்கள் முதல் உலகப் போர் வரை பெண்களை அனுமதித்ததில்லை. பெண்களைப் பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்களாகச் சேர்த்துக் கொள்வதென்பது இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்தான் ஏற்பட்டது.

பெண் விடுதலை பற்றிய உணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுவதற்கு உள்நாட்டுப் பெருந்தொழில் வளர்ச்சி அவசியம். இங்கு இத்தகைய தொழில் வளர்ச்சி தடைபட்டிருப்பதால் பெண் கல்வி, பெண் விடுதலை போன்றவற்றிற்கு எதிரான நிலப் பிரபுத்துவ மதிப்பீடுகள் இங்கு இன்னும் இறுக்கமாக நிலவுகின்றன. அத்தோடு இங்குள்ள வறுமையும் பொருளாதாரப் பற்றாக் குறையும் பெண் குழந்தைகளை மிகவிரைவில் படிப்பை நிறுத்திவிட்டு வீட்டு வேலைகளிலும் இதர வேலைகளிலும் ஈடுபட வைக்கிறது.

மேலும் நமது கல்வித் திட்டங்கள் - ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை பெண்களின் தேவைகளையும் விடுதலையையும் கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை. ஆணாதிக்க மிக்க இந்த வர்க்க சமூதாயத்தில் கல்வித் திட்டம் பிற வளர்ச்சித் திட்டங்களைப் போலவே ஆண்களை மையமாக வைத்தே நிறைவேற்றப்படுகின்றன, போதிக்கப்படும் பாடத் திட்டங்களில் ஆணாதிக்கம் வலியுறுத்தப்படுவதை பெண் விடுதலையில் ஆர்வமிக்கவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். கல்வி நிறுவனங்கள் ஆணாதிக்க மையங்களாகச் செயற்படுகின்றன. ‘கோ-எஜுகேஷன்’ கல்லூரிகள் என்று அழைக்கப் படுபவை எல்லாம் உண்மையான

அர்த்தத்தில் 'கோ-எஜுகேஷன்' கல்லூரிகளாக இருப்பதில்லை. பெண்களின் சுதந்திர உணர்வுகளை வளர்க்கத் தக்கனவாகவும், சரிபாதி அளவிற்குப் பெண் ஊழியர்களும், ஆசிரியைகளும் பணியாற்றக் கூடியதாகவும் இந்தக் கல்லூரிகள் இருப்பதில்லை. இவற்றை எல்லாம் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் 'பெண் கல்வி சீரழிந்து போச்சு' என முணகிக் கொண்டிருப்பதில் பயனில்லை.

ஆவணம் கவலைப்படும் இன்னொரு விஷயம் சிறந்த கல்வியைப் பெறும் வாய்ப்புடைய மாணவர்களிடம் சமுதாயப் பொறுப்பில்லை என்பது(1·22). உயர் கல்வி இங்கு ஓரளவு பொதுவாக ஆளும் வர்க்கங்களிடையே பகிர்ந்து கொள்ளப் படுகிறது என்றோம். ஆனால், உயர் கல்வியிலும் கூட கறாராகப் பார்த்தால் இரண்டு பிரிவுகள் உண்டு. மத்திய தர வர்க்கத்திலிருந்தும், கிராமப்புறங்களிலிருந்தும் சாதாரண சாதிகளிலிருந்தும் வருகிற மாணவர்கள் பெரும்பாலும் வசதிகள் குறைந்த கலைக் கல்லூரிகளிலேயே பயில்வர். இங்கே நூலகங்களிலும், சோதனைச் சாலைகளிலும் வசதிகள் பற்றுவதில்லை. தமிழ் மீடியத்தில் பாடப் புத்தகங்கள் இருக்காது, விடுதிகளில் நீர் வசதியும், உணவு வசதியும் நன்றாக இராது.

இது ஒரு பக்கம் என்றால் இன்னொரு பக்கம் இதற்கு நேரெதிர்மாறான வேறோர் காட்சி, ஐ.ஐ.டி, பிராந்தியப் பொறியியல் கல்லூரி போன்றவைகளுக்குச் சென்று பார்த்தீர்களானால் பிரமாதமான நூலகங்கள், உயர்தரக் கருவிகள் நிரம்பிய சோதனைச் சாலைகள், மின்னும் மொசைக் தரைகள், ஆளுயரக் குத்துவிளக்கலங்காரங்கள்... ஏன், விடுதியில் வழங்கப்படும் உணவு வகைகளில்கூட ஒப்பிட முடியாத வேறுபாடுகள்.

இந்த நிறுவனங்களுக்கு அரசாங்கத்தால் ஏராளமாக நிதி ஒதுக்கப்படுகிறது. ஏகாதிபத்திய நாடுகள் தாராளமாக

நிதி உதவிகள் செய்கின்றன. கிட்டத்தட்ட ஒவ்வொரு ஐ. ஐ. டி. நிறுவனமும் ஏதேனும் ஒரு வெளிநாட்டு உதவி யுடன்தான் இயங்குகிறது, இந்த நிறுவனங்களில் படிக்கிற மாணவர்களைப் பார்த்தீர்களானால் பேரளவிற்கு உயர் வர்க்க, உயர் சாதி மாணவர்களே நிரம்பியிருப்பர். ஐ.ஐ.டி, இல் வகுப்புவாரி இட ஒதுக்கீடு சரியாகக் கடைப்பிடிக்கப் படுவதில்லை என்று சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழகக் கல்வி அமைச்சர் கண்டனம் செய்தது குறிப்பிடத் தக்கது.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் இத் தகைய உயர் நிறுவனங்களில் போதிக்கப்படும் பாடத் திட்டங்களில் பெரும் பகுதி இந்தியா போன்ற பின் தங்கிய நாட்டின் தேவைகளை மனத்திற் கொண்டு தயாரிக்கப் பட்டவை அல்ல, இந்தியாவில் வேலை கிடைக்கவே வாய்ப் பில்லாத பலதுறைகளில் உயர் கல்வி போதிக்கப்படுகிறது. இந்தியா போன்ற மனித வளம் நிரம்பிய நாடுகளின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவை இந்தியச் சூழலுக் கேற்ப இந்த மனிதர்களின் அறிவுத் திறன்களையும், கைத் தொழில் திறன்களையும் வளர்த்தெடுப்பதுதான் என்கிற கோட்பாடுகளைப் பற்றி இங்கே கிஞ்சித்தும் கவலைப்படுவது கிடையாது.

மேலும் இந்த மாணவர்களுக்குத் தாய்மொழியில் கல்வி போதிக்கப்படுவதில்லை. நமது நாட்டின் பிரச்சினை களும், நமது மக்களின் வறுமைகளும், தேவைகளும் இவர் களுக்குத் தெரியாமல் வளர்க்கப்படுகின்றனர். சாதாரண மக்களிடமிருந்து இந்த மாணவர்கள் அந்நியப்படுத்தப்பட்டு எள்ளளவும் சமுதாயப் பொறுப்பற்று தயாரிக்கப்படுகின் றனர். இவர்கள் பார்க்கிற ஆங்கில, இந்தி சினிமாக்களும், இவர்கள் வளர்க்கப் படுகிற கலாச்சாரச் சூழலும், இவர்களுக்கு இவர்களது பெற்றோர்களால் சுட்டிக் காட்டப் படுகிற வாழ்க்கை மதிப்பீடுகளும், இவர்கள் படிக்கும்போதே வெளிநாட்டு மோகத்தையும், வெளிநாட்டு வேலை வாய்ப் பையும் இவர்களது வாழ்க்கை லட்சியமாக்குகின்றன.

இவர்கள் படித்து முடித்தவுடன் இவர்களில் சிறந்த மூளைகளைப் பொறுக்கி எடுத்து வெளிநாடுகளுக்குக் கொண்டு போய் விடுகின்றனர். சுமார் 40 சதம் ஐ. ஐ. டி பட்டதாரிகள் இவ்வாறு வெளிநாடு சென்று விடுவதாக ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. எனவே இந்தச் சூழலுக்கான அடிப்படை வேர்களை அதாவது தொழில் துறையிலும் அதன் விளைவாக அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையிலும், உயர் கல்வியிலும் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்தை நீக்குவதன் மூலமும், அடித்தட்டு மக்களை இத்தகைய கல்வி நிறுவனங்களில் கொண்டு வருவதன் மூலமும் உற்பத்தி நடவடிக்கையுடன் இணைந்த சமூகப் பொறுப்புடன் கூடிய ஒரு கல்வியை போதிப்பதன் மூலமும் மட்டுமே இந்நிலை மாற்றப்பட வேண்டுமேயொழிய வேறு வழியில்லை.

ஆனால் நமது ஆவணமோ ஏகாதிபத்தியப் பிடியில் இருந்து நமது பொருளாதாரத்தை விடுவிப்பதன் மூலம் உயர்கல்வியையும் தொழிற் கல்வியையும் திருத்தி அமைத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து சமூகப் பொறுப்பை வளர்த்தல், நிலச்சீர்திருத்தத்தை நிறைவேற்றி அடித்தட்டு மக்களுக்குக் கல்வி வாய்ப்பளித்தல், கல்லாமையை ஒழித்தல், கல்வியிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை ஒழித்தல் என்பன போன்ற திசைகளில் தன் பார்வையைச் செலுத்தாமல், இருக்கிற நிலைமையைத் தக்க வைத்துக் கொண்டே கல்விச் சீரழிவுகளைப் போக்கி விடலாம் என மக்களை நம்ப வைக்க முனைகிறது. அதற்கான பொருத்த மற்ற பல தீர்வுகளை முன் வைத்து ஏமாற்ற முயற்சிக்கிறது இவற்றை இப்போது ஒவ்வொன்றாகக் காண்போம்.

ஆவணம் வலியுறுத்திப் பரிந்துரை செய்கிற தீர்வுகளிலொன்று முறைசார் (Formal Education) கல்வியை குறைத்துத் தொழில்சார் கல்வியை (Vocational Education)

அதிகரித்தல் எதிர்காலத்தில் ஆரம்பக் கல்வியில் 40 சதத்திற்கும் மேலாக தொழில்சார் கல்வியாகவே இருக்க வேண்டும் என்கிற அளவிற்கும் போகிறது ஆவணம் (4, 120, 4.113, 4.22, 4.30, 3 27, 3.28, 3.29) மேலோட்டமாகப் பார்க்கும் போது வேலை இல்லாத் திண்டாட்டம் மலிந்துள்ள ஒரு நாட்டில் இது ஏற்றுக் கொள்ளப் படக் கூடிய ஒரு முற்போக்கான கோட்பாடாகவே தோன்றும் அத்தோடு உழைப்பு நடவடிக்கையோடு இணைந்த கல்வி என்பதுதானே ஒரு சரியான கல்விக் கொள்கையாக இருக்க முடியும் எனவும் தோன்றும். இந்தியச் சூழலில் இது எவ்வாறு பொருந்தாது என்பதை அடுத்துக் காண்போம்.

தொழில்சார் கல்வி என்பது நம் நாட்டில் தோற்றுப் போய்விட்டதெனவும், இதற்கு தொழில்சார் கல்வி கற்பது இழிவானது என்கிற சமூக மதிப்பீடே காரணம் எனவும் ஆவணம் பிறிதோரிடத்தில் கூறுகிறது(4·30) நிதர்சனமான உண்மைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்த்தோமானால் இது தவறு என்பது புலப்படும். ஆண்டுக்காண்டு ஐ. டி. ஐ போன்ற நிறுவனங்களில் அடிப்படைத் தொழிற் கல்விக்கான விண்ணப்பங்கள் குவிவதிலிருந்து இதுபுலப்படும் இங்கே உடலுழைப்பு என்பது சற்று மதிப்புக் குறைவானது தான் என்கிற நிலப் பிரபுத்துவ மதிப்பீடு நிலவுகிறதுதான் என்றாலும் அதைக் காரணம் காட்டி எந்த வேலையையும் புறக்கணிக்கக் கூடிய அளவிற்கு இன்று இந்தியஇளைஞர்கள் இல்லை. ஓரளவிற்கு வாழ்க்கை உத்திரவாதத்தை அளிக்கக் கூடிய எந்த வேலையையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சூழலே இங்கு நிலவுகின்றது. தொழில்சார் கல்வியைக் கற்பதன் மூலம் இந்த உத்திரவாதத்தை அளிக்கக் கூடிய ஒரு வேலை உறுதி என்கிற சூழல் நிலவினால் மாணவர்களின் கவனம் நிச்சயமாக இந்தத் துறையில் திரும்பும், ஆனால் எதார்த்தம் என்னவெனில் தொழில்சார் கல்வியைக்

கற்கும் மாணவன் ஒருவன் அந்தப் படிப்பை முடித்தவுடன் ஒரு உறுதியான வேலையும் கிடைக்காமல், மேற்கொண்டு பட்ட வகுப்பு, தொழிற்கல்வி போன்றவற்றில் சேர்வதற்கும் தகுதியற்றவனாகி விடுகிறான். இதனால்தான் மாணவர்கள் இந்தத் துறையில் கவனம் செலுத்துவதில்லை.

அத்தோடு மேல்தட்டு வர்க்கங்களைச் சார்ந்த மாணவர்கள் இயற்கையான குடும்பச் சூழல், சமூக அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் முறைசார்ந்த கல்வியைப் பரிபூர்ணமாக ஆக்ரமித்துக் கொள்ளும் வாய்ப்பிருப்பதால் தொழிற்சார் கல்வியைக் கட்டாயமாக்குவதென்பது வர்க்க—சாதி அடிப்படையில் கல்விவாய்ப்பைப் பிரிக்கும் ஒரு நவீன வருணாசிரமகுலக் கல்வித் திட்டமாக மாறுகிற வாய்ப்புமுண்டு. இது ஆவணத்திலும் வெளிப்படுகிறது.

> "பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மனித சக்தியை அளிப்பதற்கு—குறிப்பாக அகக் கட்டு மானத்தையும் உற்பத்தி நுட்பங்களையும் தக்க வைப்பதற்கு உயர்நிலைக் கல்வி மட்டத்தில் தொழில் சார் கல்வியை அதிகப் படுத்துதலும். தனி நிறுவனங்கள் மூலமாகத் தொழில்சார் பயிற்சியை விரிவாக்குவதும் அவசியம் எனக் கருதப்படுகிறது (1.13)"

என்கிறது ஆவணம், பொருளாதார வளர்ச்சிக்கான அகக் கட்டுமானத்தை வழங்குவதற்குத் தொழிற்சார் கல்வி தேவை என முழங்கும் ஆவணம்,

> "எதிர் காலத்திற்கு வடிவு கொடுக்கும் மனிதர்களையும் கருத்துக்களையும் வழங்குகிறது என்கிற வகையில் உயர்கல்வி முக்கியத்துவம் பெறுகிறது (1.14)"

எனவும் கூறுகிறது. இரண்டையும் தொகுத்துப் பார்க்கும்போது மூளை உழைப்பிற்கு உயர் கல்வியும்,

தொழில்சார் கல்வியும் என ஆவணம் திட்டமிடுவது வெட்ட வெளிச்சமாகிறது, ஆவணம் திட்டமிடுவது போல சுமார் 50 சதக் கல்வி தொழில்சார் கல்வியாக மாற்றப்படுகிறது என்றால் மீதியுள்ள 50 சத முறைசார் கல்வி இன்றைய சமூகப் பொருளாதாரச் சூழலில் மேலாதிக்கம் செலுத்தும் உயர்வர்க்க உயர்சாதிப் பிள்ளைகளாலேயே ஆக்ரமித்துக் கொள்ளப்படும் என்பது தெளிவு, பெரும்பான்மையான விவசாய, தொழிலாளர் குடும்பங்களிலிருந்து வரும் அடிப்படை வர்க்க மற்றும் தாழ்ந்த சாதிகளைச் சேர்ந்த குழந்தைகள் தொழில்சார் கல்வியில் முடங்கி மேற்படிப்பு வாய்ப்பிழந்து உடலுழைப்பில் தேங்கிப் போகவேண்டியது தான்,

நாம் இவ்வாறு சொல்வதால் கல்வியை உடலுழைப் போடு இணைப்பதில் நமக்குடன்பாடில்லை என்று பொருளல்ல. மாறாக உண்மையான கல்வி என்பது உற்பத்திக்கான உழைப்புடன் இரண்டறப் பிணைந்த தாகவே இருக்கமுடியும். மூளையுழைப்புச் செய்வோர் உடலுழைப்பில் ஈடுபடுவதென்பதும். உடலுழைப்புச் செய்வோர், தொடர்ந்த கல்வி மூலம் தங்களை மூளை யுழைப்பிற்குத் தகுதியாக்கிக் கொள்வதென்பதும் அந்நிய மூலதனங்கள் பறிக்கப்பட்ட, நிலச் சீர்திருத்தங்கள் நிறை வேற்றப்பட்டு கல்வியில் சமவாய்ப்பு வழங்கப்பட்ட ஒரு சனநாயக அரசின் கீழ் முயலப்படலாம். ஒரு சோஷலிச அரசில் அது சாத்தியமாகலாம். அந்நிய மூலதனமும், நிலப் பிரபுத்துவமும் கோலோச்சும் இன்றைய சூழலில் இது ஒரு புதிய வருணாசிரமமாகவே அமையும் என்பதுதான் உண்மை.

தொழில் நிறுவனங்களுடன் தொழிற் கல்வியை இணைக்க முடியவில்லை எனவும் பொறுமுகிறது ஆவணம் (4.119). நவீன தொழில்நுட்பங்களை வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்வது இலாபகரமாக இருப்பது,

தொழில் நிறுவனங்கள் இதில் ஆர்வங் காட்டாததற்குக் காரணமாக இருக்கலாம் என ஓரளவு சரியாகக் காரணத்தைக் கணிக்கவும் செய்கிறது (4.119) ஆவணம். சுமார் 40 சத டாக்டர் பட்டதாரிகளும், 69 சத பொறியியற் பட்ட மேற்படிப்புப் பட்டதாரிகளும் தங்களது ஆய்விற்கு அப்பாற்பட்ட துறைகளில் பணிபுரிகிற அவலத்திற்குக் காரணமாகவும் தொழில்நுட்பங்களை இறக்குமதி செய்வதைச் சுட்டிக் காட்டுகிறது ஆவணம். ஆனால் இதை உறுதியாகச் சொல்லாமல் பல்வேறு காரணங்களில் ஒன்றாகக் கூறி, உண்மையான காரணம் ஆய்வுகள் இந்தியச் சூழலுக்குப் பொருந்தாதுதான் என்பதுபோல முடிக்கிறது. ஆய்வுகள் இந்தியச் சூழலுக்குப் பொருத்தமற்றுப் போவதை வேறோர் சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.* இங்கே 'தொழில்நுட்ப இறக்குமதி'ப் பிரச்சினையை மட்டும் எடுத்துக்கொள்வோம்.

கல்விக் கொள்கை, தொடர்பான பல்வேறு பிரச்சினைகளும் இந்தியாவின் அடிப்படையான அரசியல், பொருளாதார, சமூகக் கட்டுமானங்களுடன் பின்னிப் பிணைந்து கிடப்பதுபோலவே, இந்தத் தொழில் நுட்ப இறக்குமதிப் பிரச்சினையையும் விளங்கிக் கொள்ள நமது சமூக உருவாக்கத்தின் சில முக்கியமான காரணிகளை விளங்கிக் கொள்வது அவசியம்.

---

* நூலாசிரியர் எழுதியுள்ள 'மூன்றாம் உலக நாடுகளில் ஆராய்ச்சியின் சமூகப் பொருத்தங்கள்' என்ற கட்டுரையைக் காண்க. ['தத்துவமும் இலக்கியமும்' அச்சில்.]

3

புதிய கல்விக் கொள்கையை விமரிசித்து எழுதியுள்ள திரு. தினேஷ்மோகன் (EPW, Sep 21, 1985) குறிப்பிடுகிற ஒரு செய்தி இங்கு கவனத்திற்குரியது. 1981-இல் புது டெல்லியில் நடைபெற்ற 'இந்திய பொறியியற் சந்தை'யில் பங்குகொண்ட நிறுவனங்களில் 80 சத நிறுவனங்கள் வெளி நாட்டுத் தொடர்புடையவை என்கிறார் மோகன். அதே போல 1984ஆம் ஆண்டு 'இந்து' நாளிதழ் வெளியிட்டுள்ள இந்தியத் தொழில்கள் பற்றிய ஆய்வு மலரில் 70 சத விளம்பரங்கள் வெளிநாட்டுக் கூட்டுடன் நடைபெறும் நிறுவனங்களாலேயே தரப்பட்டுள்ளன. இந்தியத் தொழி லில் அந்நிய மூலதனங்களின் ஆதிக்கம்பற்றியும், இங்கு தேசியத் தொழில் வளர்ச்சி முடக்கப்படுவது பற்றியும் ஏராளமான ஆய்வு நூற்கள் வெளிவந்துள்ளன. இவை பற்றி ஆராய்வது இங்கு நோக்கமன்று. மோகன் குறிப்பிடு கிறார் :

> "இந்தியத் தொழில் நிறுவனங்கள் புதிய சாதனை களாகப் பீற்றிக் கொள்ளும் பல சாதனைகள் உண்மையில், இறக்குமதி செய்யப்பட்ட பொருட் களைச் சிறிது மாற்றி அமைக்கும் சாதனைகளே யாகும் எனப் பல்வேறு ஆய்வுகள் வெளிப்படுத்தி யுள்ளன. இத்தகைய சூழலில் தொழிற் கல்விக்கும், தொழில் நிறுவனங்களுக்குமிடையே பரஸ்பரத் தொடர்புகளை எதிர்பார்ப்பது எவ்வாறு சாத்தியம் ?"

மோகனின் கருத்து ஆழ்ந்த சிந்தனைக்குரியது. ஆற்றல், கனரகத் தொழில், போக்குவரத்து, உரம், பூச்சிக்கொல்லி மருந்து, எலக்ட்ரானித்துறை, கம்ப்யூட்டர் போன்ற அனைத்து உற்பத்தியிலும் வெளிநாட்டின் ஏஜண்டுகளாகவே செயற்படும் தொழில் நிறுவனங்களே விளங்கும் இந்தியச் சூழலில் இந்தியத் தன்மைமிக்க ஆய்வுகளும், தொழில்

நுட்பங்களும், தொழிற்சாலைகளும் எவ்வாறு சாத்தியம்? திரு. சுக்லா,

> '' பொருளாதார, ராணுவ, அரசியல் துறைகளில் இருக்கும் மேற்கத்திய செல்வாக்கு கல்வித் துறையிலும் பிரதிபலிக்கவே செய்யும். பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் கிளைகளை மூன்றாம் உலக நாடுகளில் நிறுவும்போது இங்கு கல்வியும் அவர்களுக்குச் சாதகமான அதிகார வர்க்கத்தினரையும், முதலாளிகளையம் பயிற்றுவிக்கவே முயலும். மேற்கத்திய கண்ணோட்டத்தில் நின்று இடைவெளியை நிரப்பும் கல்வியாகவே இது அமையும். மக்களும் மேற்கத்திய மாதிரிகளையே கருதவும் தொடங்குவர் ''

எனக் கூறுவதும் (EPW. 17—8—85) ஏற்புடையதேயாகும்.

எனவே இத்தகைய அடிப்படையான விஷயங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அதற்கான நடவடிக்கைகளில் இறங்காமல் புதிய கல்விக் கொள்கைகளை அறிவித்துக் கொண்டிருப்பதென்பது மக்களைத் திசைதிருப்பப் பயன்படலாமேயொழிய விளம்பரம் செய்கிற விளைவுகளைப் பெறுவதற்குப் பயன்படாது.

இந்திராகாந்தியின் பெயரால் திறந்த பல்கலைக் கழகம் (Open University) என்று அமைப்பதென்பதும், மாவட்டந்தோறும் மாதிரிப் பள்ளிகள் அமைப்பதென்பதும் பு. க. கொ. ஆவணம் பரிந்துரைத்துள்ள இதர திட்டங்களாகும். (4.21, 4.101) கல்வியிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கும், வயது வந்தோர் கல்வித் தகுதியை அதிகரித்துக் கொள்வதற்கும் திறந்த பல்கலைக் கழகங்களைத் திறப்பதென்பது மேனாட்டு மாதிரிகளை அப்படியே காப்பியடிப்பதாகும். மொத்த சமுதாயமும் நல்ல அடிப்படைக் கல்வியைப் பெற்றுள்ள ஒரு சூழலிலேயே திறந்த

பல்கலைக் கழகங்கள் வெற்றியடையமுடியும். மேலும் கல்வி மூலம் தகுதியை உயர்த்திக் கொள்வதன் மூலம் மேல் நோக்கி உயர வாய்ப்பிருக்கும் பட்சத்திலேயே வேலையில் இருப்போர் திறந்த பல்கலைக் கழகங்களில் ஆர்வங் காட்டுவர் அதிகக் கல்வியும், தகுதியும் சிறந்த வாழ்க்கையின் திறவுகோல் என்கிற சமூக மதிப்பீடும் அவசியம். முழுமையான கல்வித் தகுதி படைத்தவர்களே இலட்சக் கணக்கில் வேலையின்றி வீதியில் அலையும் இந்தியச் சூழலில் இத்தகைய வாய்ப்புக்களில்லை என்பதால் ஆவணம் திட்டமிடும் திறந்த பல்கலைக் கழகங்கள் என்பன தோல்வியைத் தான் தழுவும் என்பதை நாம் முன்கூட்டியே அனுமானிக்க முடியும்.

மாவட்டங்கள் தோறும் மாதிரிப் பள்ளிக் கூடங்கள் அமைப்பதன் மூலம் சிறந்த கல்வி வாய்ப்பைக் கிராமப்புற மக்களுக்கு அளிக்க முயலும் திட்டமும் (4.23) இவ்வாறே இந்திய சமூகப் பொருளாதாரச் சூழலில் இருக்கிற ஏற்றத் தாழ்வுகளை அதிகரிக்கவே பயன்படும். மாவட்ட மாதிரிப் பள்ளிகள் என்பன இன்று ஏதோ புதிதாக அறிவிக்கப்படுவன அல்ல. 1800 களில் காலனிய - நிலவுடமைச் சமூக அமைப்பிற்கு ஏற்ற ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்க முயன்ற காலனிய ஆட்சியாளர்கள் அறிவித்த திட்டங்களில் இதுவும் ஒன்று. அதையேதான் இன்றைய ஆட்சியாளர்கள் பு.க.கொ. பெயரில் அறிவிக்கிறார்கள், கிராமப் புறங்களிலுள்ள ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப் படாத ஒரு நிலையில் இத்தகைய மாதிரிப் பள்ளிகளை கிராமப்புற நிலவுடமையாளர்களும், அதிகார வர்க்கத்தினருமே பயன்படுத்துவர், மீண்டும் அடித்தட்டு வர்க்கக் குழந்தைகள் வசதிகளற்ற ஆரம்பப் பள்ளிகளில் வதிய வேண்டியதுதான்.

இத்தகைய மாதிரிப் பள்ளிகளை அறிவித்த அன்றைய ஏகாதிபத்திய அரசு. அத்துடன் கூடவே தனியார் சார்பான

கல்வி நிறுவனங்கள் நிறுவப்படுவதையும் ஊக்குவித்தது. 1880 இல் நிறுவப்பட்ட ஹண்டர் கமிஷன் இதனை வலியுறுத்தியது. இன்றைய கல்விக் கொள்கையும் கிராம மட்டங்களிலிருந்து உயர் கல்வி வரை தனியார்மயமாதலை ஆதரிப்பதென்பது நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய கொடிய கூறாகும். கிராமப் புறங்களில் கல்வியின் மீது சமூதாயக் கட்டுப்பாடு என்கிற பெயரில் "பொருள் வளமும் அறிவும், திறமையும் உள்ள சமுதாய உறுப்பினர்கள் கல்வி நிறுவனங்கள் உருவாக்கத்திலும் நிர்வாகத்திலும் உதவ வேண்டும்(3 11) எனவும்" தொழிற் பட்டதாரிகளைப் பயன்படுத்தப்போகும் நிறுவனங்களிடமிருந்து அவர்களை உருவாக்கும் செலவில் ஒரு பகுதியையேனும் பெறுதல் (4·63)" என்ற பெயரிலும் "பணவசதியுள்ளவர்கள் தங்கள் கல்விச் செலவிற்கான முழுத் தொகையையும் கொடுத்துப் பயிலவைப்பதன்மூலம் நன்கொர்டைகொடுத்துப் பயிலும் சுயநிதிக் கல்லூரிகள் தொழிற் கல்வியின் அடித்தளத்தை விரிவாக்கும் சமூகக் குறிக்கோள் நிறைவேற்றப்படுகிறது என்கிற கருத்தும் நிர்வாகங்களின் சார்பாக முன்வைக்கப்படுகிறது"(4·89)என்றும் தனியார் கல்வி நிறுவனங்களையும், சுயநிதிக் கல்லூரிகளையும் ஊக்குவிக்கும் போக்கு இந்த ஆவணம் முழுவதும் காணப்படுகிறது.

இந்த இடத்தில் தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றிக் கொஞ்சம் சொல்லியாக வேண்டும். வள்ளல் பட்டங்கள் சிலை அலங்காரங்களுடன் நடத்தப்படும் இந்தத் தனியார் கல்லூரி நிறுவனங்களில் 90 சத நிதி அரசாங்க மான்யமாகவும் மாணவரிடமிருந்து வசூல் செய்யும் கட்டணமாகவும் பெறப்படுகின்றது விடுதிச் செலவில் பத்து சதம் மட்டும் கட்டிடச் செலவுகளில் 17 சதம் மட்டும், கருவிகளில் 12 சதம் மட்டும், மாணவர் உதவித் தொகையில் 10 சதம் மட்டும் இந்தத் தனியார் தரும நிறுவனங்களில் செலவிடப்படுகின்றன. எடுத்துக் காட்டாக 1969–70 கல்வி ஆண்டில் கல்விக்காகச் செலவிடப்பட்ட

மொத்தச் செலவினங்களில் 75 சதம் அரசுத் துறை நிதியும், 3.7 சதம் நகரசபை போன்ற தல நிறுவன நிதியும், 14.6 சதம் மாணவர்களிடமிருந்தும் பெறப்பட்டது. தனியார் செலவிட்டது 6.8 சதம் மட்டுமே.

அண்ணாமலைப் பல்கலைக் கழகச் செலவினங்களைப் பார்த்தால் இந்த உண்மை பட்டவர்த்தனமாகும். கட்டிடங்கள் கட்டுவது உட்பட 1981 வரை அண்ணாமலை நிர்வாகம் செலவழித்த தொகை ருபாய் 52 லட்சம் மட்டும்தான். தமிழக அரசு மான்யமாகக் கொடுத்ததோ 15 கோடி. அதாவது 1500 இலட்சம் ருபாய்! இது தவிர பல்கலைக் கழக மான்யக் குழு 500 லட்சம். ஆசிரியர், மாணவர், பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட நன்கொடை 50 லட்சம்.

பத்து சதமாவது செலவழிக்கிறார்களே புண்ணியவான்கள்-இது பெரிதில்லையா? என்று சிலருக்குத் தோன்றலாம். இந்தப் பத்து சதத்திற்கு வள்ளல் பட்டம், நிறுவனத்திற்குப் பெயர், கல்லூரி முகப்பில் சிலை இவை தவிர இவர்கள் அடைகிற லாபங்கள் எவ்வளவு தெரியுமா? சிலவற்றை மட்டும் பட்டியல் போடுவோம்.

(அ) நில உச்சவரம்புச் சட்டங்களிலிருந்து 'பினாமி'யாக ஒதுக்கியது போக நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை 'தர்ம நிறுவனம்' என்கிற பெயரில் ஒதுக்கிக் கொள்ளல்;

(ஆ) எம்.ஏ., எம்.எஸ்.சி, பி.காம் போன்ற போட்டியுள்ள பாடங்களுக்கான இடங்களை இட ஒதுக்கீடு, தகுதி ஆகியவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் தங்கள் சாதியினருக்கும், வேண்டியவர்களுக்கும் ஒதுக்கிக்கொள்ளல்; நல்ல விலைக்கு விற்றல்;

(இ) வேலை வாய்ப்புகளையும் இவ்வாறு ஒதுக்கிக் கொள்ளல், விற்றல்;

(ஈ) அரசாங்க மான்யங்களை வாங்கிச் சுய லாபத்திற்குப் பயன்படுத்தல் - மான்யமாக வரும் பணத்தைப் பல ஆண்டுகளுக்குச் செலவிடாமல் வேண்டிய வங்கியில் முதலீடு செய்து வட்டியை அனுபவிப்பதோடு, வேண்டியவர்களுக்கு அந்த வங்கியில் வேலையும் பெறுதல்;

என அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவை தவிர, அரை நிலப்பிரபுத்துவம் கோலோச்சும் நமது நாட்டில் ஆதிக்க சக்தியாக விளங்கும் நிலப்பிரபுக்கள் தங்கள் ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான நவீன உபாயங்களில் ஒன்றாகவும் இந்நிறுவனங்கள் பயன் படுகின்றன. நமது நாடு போன்ற மூன்றாம் உலக நாடு களில் கல்வி என்பது வேலை பெறுவதற்கான 'அனுமதிச் சீட்டை'ப் பெற்றுத்தரும் கருவியாகவே கருதப்படுகிறது. படித்தவர்கள் எல்லோருக்கும் வேலை உறுதியில்லை என்கிற நிலை இப்போது ஏற்பட்டுவிட்டாலுங்கூட இன்றும் வேலை கிடைப்பதற்கு பட்டம் ஒரு அத்தியாவசியம் என்கிற நிலை நீடிப்பதன் விளைவாக எப்படியாவது தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைத்துவிட வேண்டும் என்கிற ஆசை பெற்றோர்களிடம் தவிர்க்க இயலாமல் நிறைந்து விடுகிறது. இதனால் கல்வி நிறுவனங்களில் ஏகப்பட்ட கூட்டம்.

வசதி படைத்தவர்களும், நகரங்களைச் சார்ந்த மேல் தட்டினரும் தங்கள் பிள்ளைகளை "உயர்ந்த" பள்ளிக் கூடங்களில் படிக்கவைத்து நிறைய மதிப்பெண்கள் எடுக்க வைத்துவிடுகின்றனர். கிராமப்புற ஏழைகள்தான் பாவம். வாய்ப்பற்ற சூழலில் வளர்வதாலும் வசதியற்ற பள்ளிகளில்

படிப்பதாலும் நிறைய மதிப்பெண்கள் பெறுவதில்லை. இந்தச் சூழலில் இவர்கள் அருகிலுள்ள தனியார் கல்லூரி நிறுவனங்களின் முதலாளியாக உள்ள நிலப்பிரபுக்கள், தொழிலதிபர்கள் ஆகியோரின் தயவை நாட வேண்டிய தாகிறது. செல்வாக்குகள் இப்படி ஆண்டுதோறும் புதுப் பிக்கப்படுகின்றன.

நிலப்பிரபுத்துவத்தின் பண்பாட்டு வெளிப்பாடுகளாகிய சாதி, மதப் புத்துயிர்ப்பு நடவடிக்கைகட்கும் மேலாதிக்க நடவடிக்கைகட்கும் இத்தகைய நிறுவனங்கள் பெரிதும் உதவிபுரிகின்றன. பல நிறுவனங்கள் சாதி, மதப் பெய ராலேயே தொடங்கப்பட்டிருப்பதையும், வேலை வாய்ப்பு மற்றும் மாணவர் சேர்க்கையில் தங்களவர்க்கே முன்னுரிமை கொடுப்பதையும் காணலாம். கல்வி நிறுவன முதலாளிகள் பலர் ஆர்.எஸ்.எஸ்., முஸ்லிம்லீக்., கிறிஸ்தவ முன்னணி போன்ற மதவெறி நிறுவனங்களில் முன்னணியினராக இருப்பதையும் காணலாம். மேலும் இத்தகைய மதவெறி நிறுவனங்கள் பயிற்சி அளிப்பதற்கும், மாநாடுகள் நடத்து வதற்கும் தங்களது கல்வி நிறுவனக் கட்டிடங்களைத் தாராளமாகத் திறந்து விடுவதையும் காணலாம். ஆசிரியர் களும் மாணவர்களும் இத்தகைய கல்வி நிறுவனங்களின் அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடும்போது இந்த முதலாளிகள் தாங்கள் சார்ந்துள்ள சாதிமத நிறுவனங் களின் சார்பாக எதிர் நடவடிக்கைகளில் இறங்குவதையும் காணலாம்.

இவை மட்டுமா ? போராடும் ஆசிரியர்களையும் மாண வர்களையும் ஆள்வைத்து அடித்த நிர்வாகம், நீச்சல் குளத்தில் மாணவிகளை நீந்தவிட்டு வேடிக்கை பார்த்த நிர்வாகம், ஆசிரியரது வீட்டில் புகுந்து அவரது தாலியை அறுத்த நிர்வாகம் கருவுற்றிருந்த ஆசிரியையை ஓடவிட்டுக் கருச்சிதைவு செய்த நிர்வாகம், போராடிய மாணவர்களை எலக்ட்ரிக் ஷாக் மூலம் தண்டித்த நிர்வாகம் ... என இந்த நிர்வாகங்கள் செய்துவரும் கொடுமைகள் ஏராளம்.

பெரும்பாலும் நகரங்களைச் சார்ந்த இக்கல்லூரிகளில் மேல்தட்டு வர்க்க மாணவர்களே அதிகம் சேர்கின்றனர். படிப்பிற்குகந்த வீட்டுச் சூழல், படித்து முடித்தபின் எப்படியும் வேலை வாங்கிவிடலாம் என்கிற நம்பிக்கை ஆகியவற்றின் விளைவாகக் கவனத்துடன் படிக்கும் இவர்கள் அதிக அளவில் வெற்றிபெறுகின்றனர். கிராமப் புறங்களிலிருந்து வரும் ஏழை எளிய மாணவர்கள் அரசு கல்லூரிகளில் சேர்கின்றனர். தேர்விலும் குறைந்த அளவே வெற்றிபெறுகின்றனர். இதனால் தனியார் கல்லூரிகளில் சிறந்த கல்வி பயிற்றுவிக்கப்படுவதாக பிரமை வேறு. சொல்லப்போனால் சமூகப் பொறுப்பற்ற புத்தகப் புழுக் களையே இவை உற்பத்தி செய்கின்றன.

தனியார் நிறுவனங்களில் பல சிறுபான்மை இனத் தவரால் நடத்தப்படுவதால் அரசியல் சட்ட ரீதியாக அதிகச் சலுகைகள் வேறு. ''சிறுபான்மையினருக்கான சிறப்புச் சலுகைகள் என்பன ஆசிரிய - மாணவர்க்கெதிரான ஊழல் நிர்வாகத்திற்கான உரிமைகள் அல்ல'' என உச்சநீதி மன்ற நீதிபதிகளே எச்சரித்திருக்கிறார்கள் என்றால் இவற்றின் கொடுமைகளைக் கணித்துக்கொள்ளலாம்.

அரசு உதவி பெறும் (aided institutions) நிறுவனங் களே இப்படி என்றால் அரசு இப்போது ஏராளமாக 'லைசன்ஸ்' வழங்கி அனுமதிக்கப்பட்டு வருகிறதே சுயநிதிக் கல்லூரிகள் (Self-financing Institutions) இவற்றைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. இவற்றிற்கு அரசு நிதி உதவி அளிப்பதில்லை. ஆனால் இவை 50 சதம் மாணவர்களை 'எப்படியும்' சேர்த்துக் கொள்ளலாம். அதாவது, சந்தை விலைக்கு விற்றுக் கொள்ளலாம். கேரளத்தில் இன்று ஒரு மருத்துவக் கல்லூரி இடம் 3.5 லட்சம் ரூபாய். அண்ணா மலைப் பல்கலைக் கழகம் 2.5 லட்ச ரூபாய் எனப் பத்திரிகை யிலேயே விளம்பரம் செய்ததை அனைவரும் அறிவோம். ஒரு

25 134381

பி.காம் இடம் 10 ஆயிரம் ரூபாய். ஒரு கம்ப்யூட்டர் சயின்ஸ் இடம் இருபத்தையாயிரம் ரூபாய்.

50 சத மாணவர்களுக்கு மட்டும் இடஒதுக்கீட்டைப் பின்பற்றினால் போதும். ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுங்கூட விலைக்குத்தான் கிடைக்கும். பெரியார் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட திராவிட கழக டிரஸ்டு நடத்தும் நிறுவனங்களுங்கூட இப்படிக் கொள்ளை அடிக்கிற கதை நமக்குத் தெரியும்.

வணிக சங்கங்கள் இப்போது தங்கள் 'பிசினஸில்' ஓரங்கமாகக் கல்லூரிகள் தொடங்கி இருப்பதையும் காணலாம். பணம் இல்லாதது ஒன்றையே காரணங் காட்டி எத்தனையோ ஏழை எளிய மாணவர்களுக்குக் கல்வி மறுக்கப்படத் தொடங்கியாகிவிட்டது. பணம் ஒன்றையே தகுதியாகக் கொண்டு இனி டாக்டர்களும் என்ஜினியர்களும் உலா வரப் போகின்றனர். இரண்டரை லட்ச ரூபாய் கொடுத்து ஒரு மருத்துவக் கல்லூரி இடத்தை ஒரு மாணவன் என்ன நம்பிக்கையில் வாங்குகிறான்? ''வரதட்சிணையாக இந்தப் பணத்தைக் கறந்து விடலாம். ஏழை எளிய மக்களிடம் சுரண்டிப் பறித்துவிடலாம், வஞ்சகமாகக் கொள்ளை அடித்துவிடலாம்'' போன்ற நம்பிக்கைகளும் விழுமியங்களும் இளம் நெஞ்சங்களில் விதைக்கப்படுவது என்ன துரதிர்ஷ்டம்! இத்தகைய சுயநிதிக் கல்லூரிகளுக்கு வக்காலத்து வாங்கும் பு க கொ. ஆவணம் இத்தகைய மாணவர்களிடம் சமூகப் பொறுப்பில்லை எனக் கண்ணீர் வடிப்பது என்ன நீலித்தனம்?

சரியான கட்டிட வசதி, நூலக வசதி, ஆய்வக வசதி, விடுதி வசதி இவை இல்லாமல் தகுதியான ஆசிரியர்களையும் நியமிக்காமல் காலான்கள் போல இந்தக் கல்லூரிகள் பெருகத் தொடங்கிவிட்டன குறைந்த சம்பளத்தில் கொத்தடிமைகளாக வேலை இல்லாப் பட்டதாரிகள்

ஆசிரியர்களாக நியமிக்கப்படத் தொடங்கியாயிற்று. சங்கம் வைக்கக்கூட உரிமையற்ற ஆசிரியப் பட்டாளத்தையும், பணம் வாங்கிச் சேர்த்த மாணவர்களையும் வைத்துக் கொண்டு இதோ பட்டதாரிப் பட்டறைகள் முளைக்கத் தொடங்கிவிட்டன. 'சுரண்டலின் மிகக் கொடிய வடிவமிது' என இதனை முன்னாள் நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் சில நாட்களுக்கு முன்பு (செப்டம்பர் 6, கோவை) கூறி இருப்பது நம் கவனத்திற்குரியது.

கல்வியில் தனியார் ஆதிக்கத்திற்கு முழுமையாக முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இதை விடுத்து ''தனியார் நிறுவனங்கள் அப்படியே இருக்கட்டும். பணியாற்றும் ஊழியர்களை மட்டும் அரசு ஊழியர்களாக மாற்றினால் போதும்'' எனக் கூறுவது எள்ளளவும் கல்வியிலும், மாணவர் நலனிலும், சமுதாயத்திலும் அக்கறையற்றதும் நிறுவன முதலாளிகளுக்குச் சாதகமானதும் ஆகிய சமரச வாதமேயாகும்

கல்வியில் தனியார் ஆதிக்கம் பற்றி இத்தகைய கருத்துக்கள் முற்போக்குச் சிந்தனையாளர்கள் மத்தியில் நிலவி வரும் சூழலில் தனியார் ஆதிக்கத்தை வலியுறுத்தும் மிகவும் விஷமத்தனமானது. கல்வியில் அக்கறையுடைய எவரும் ஒன்றிணைந்து எதிர்க்கவேண்டிய முதல் முக்கிய விஷயமிது. கிராமப் புறங்களில் பொருள் வளமும் அறிவு வளமும் படைத்தவர்கள் கல்வி நிறுவனங்கள் தொடங்குவதை ஊக்குவிப்பதென்பது (3.75) கிராமப்புற ஆதிக்க சக்திகளாக விளங்கும் நிலப்பிரபுக்களின் கையில் கல்வியைத் திணிப்பதைத் தவிர வேறேதுமில்லை.

ஆவணம் பரிந்துரை செய்யும் தீர்வுகளில் ஒன்று நவீன தொழில்நுட்பங்களையும் அறிவியற் சாதனைகளையும் முறைசாராக் கல்வி மற்றும் முறைசார் கல்வியில் அதிகம்

பயன்படுத்துவது. துணைக்கோள், டெலிவிஷன், கம்ப்யூட்டர் போன்ற நவீன சாதனங்களின் பயன்பாட்டைப் பற்றி அடிக்கடி கூறி மகிழ்கிறது ஆவணம்(4.13, 4.20, 4.34, 4.21). ரேடியோ, டெலிவிஷன் போன்றவைகள் மூலம் கல்வி போதிப்பதென்பது வீட்டில் கற்பதற்குரிய வசதியும் சூழலு மற்ற அடித்தட்டுக் குழந்தைகளுக்குப் பயன்படாது. ஆசிரியரின் நேரடியான கண்காணிப்பு, ஊக்குவிப்பு, இதர மாணவர்களுடன் இணைந்து பயில்வது, இதன் மூலம் வளரும் சமூகப் பொறுப்பு ஆகியவை முறைசார் கல்வியின் சிறப்பம்சங்கள். முறைசாராக் கல்வி வெற்றி பெறுவதற்கு சமூகத்தின் சகல மட்டத்திலும் அடிப்படையான கல்வி வளர்ச்சி, வறுமையற்ற சூழல் ஆகியவை முன் அவசியங்களாகும். இவை இல்லாத இந்தியச் சூழலில் இவற்றின் பயன்பாடு மிகவும் குறுகிய எல்லைக்குட்பட்டதேயாகும். பரஸ்பர வினையாக்கத்தின் மூலம் நடைபெறும் முறைசார் கல்வி நடவடிக்கைக்குப் பதிலாக செயலூக்கமற்ற முறையில் சொன்னதை அப்படியே பதிய வைப்பதன்மூலம் கல்வி புகட்டும் டெலிவிஷன் போன்றவற்றின் பயன்பாட்டை அதிகரிப்பதென்பது பிள்ளைகளின் செயலூக்கத்தையும், முன்முயற்சியையும், கற்கும் ஆற்றலையும் குறைக்கவே செய்யும். வீட்டில் கற்கும் சூழலற்ற குழந்தைகளிடம் இது மேலும் கொடிய விளைவையே ஏற்படுத்தும்.

எனவே தொழில்சார் கல்வி, முறைசாராத கல்வி, ரேடியோ டெலிவிஷன் மூலம் கல்வி போன்றவை எல்லாம் அந்நிய மூலதன ஆதிக்க ஒழிப்பும் நிலச் சீர்திருத்தமும் நிறைவேற்றப்பட்டு இருக்கிற ஏற்றத் தாழ்வுகள் அகற்றப் பட்ட ஒரு சூழலில் நிறைவேற்ற முயற்சிப்பதென்பது இவர்கள் ஆர்ப்பாட்டமாக விளம்பரம் செய்யும் குறிக்கோள்கள் எதையும் நிறைவேற்றப் பயன்படாது; மாறாக இருக்கிற ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கவே பயன்படும் என்பதைக் கல்வியில் அக்கறையுள்ளவர்கள் சுட்டிக்காட்ட வேண்டியது கடமையாகும்.

இந்த ஆவணம் முழுவதும் ஆசிரியர் விரோதப் போக்குடன் அமைந்துள்ளதையும் கவனித்தல் வேண்டும். அரசியல், சாதியம், பிராந்திய வாதம் ஆகியவற்றால்தான் கல்வி நிறுவனங்கள் சீரழிந்துள்ளன எனக் கூறும் ஆவணம் (3.72) ஆசிரியர்கள் அரசியல்படுத்தப்பட்டிருப்பது கல்வி அழிவுகளுக்கு ஒரு முக்கிய காரணமாக அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (3.54, 3.32, 4.27). கல்வி நிறுவனங்களில் அரசியலகற்றுவதை ஒரு குறிக்கோளாகக் கூறும் ஆவணம் (4.27) மத்திய அரசு இதற்காகச் சில விசேஷ அதிகாரங்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது குறித்தும் ஒரு முடிவெடுத்தாகவேண்டும் (4.47) எனக் கூறும்போது மிரட்டல் தொனிக்கிறது. அதிகாரப் பரவல் பற்றி நீலிக் கண்ணீர்வடிக்கும் ஆவணம் இவ்வாறு புதிய அதிகாரங்களை மேற்கொள்ள முயற்சிப்பதும் அதற்குத் தடையாக இருக்கிற சட்டங்கள் நிலவினால் அவற்றை மாற்றியமைக்கவும் தயங்கோம் என மார்தட்டு வதும் (4.135) அதிகாரக் குவியற்போக்கை வலியுறுத்துவ தாகவே அமைந்துள்ளது என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

அரசியல் சாராத தூய கல்வி என்பது ஆளும் வர்க்கக் கூப்பாடுகளில் ஒன்று என்பதும் ஒவ்வொரு சொல்லுக்கும் செயலுக்கும் பின்னால் ஒரு அரசியல் ஒளிந்துள்ளது என்பதும் வெளிப்படை. 'அரசியல் வேண்டாம்' என்கிற முழக்கம், ஆளும் வர்க்க அரசியல் தவிர வேறு அரசியல் வேண்டாம்; எதிர் அரசியல் அதாவது மக்கள் அரசியல் வேண்டாம் என்பதன் இரண்டாவது வடிவமாகும். சென்ற செப்டம்பர் 24, 1985 அன்று தமிழக அரசு முன்னின்று ஈழத் தமிழர்களுக்காக ஒரு கடை அடைப்பை நடத்தியது. அதில் ஆசிரியர்கள் உட்பட அனைவருமே பங்கேற்றனர். அதனை அரசும் ஊக்குவித்தது. இது அரசியல் இல்லையா? இது அரசியல் இல்லை என்றால் ஈழத்தமிழினம் முதல் இந்திய தேசிய இனங்கள் வரை ஒடுக்கப்படும்போது அதனை எதிர்த்துக் குரல்கொடுப்பதும், என். டி. ராமராவ் அரசு

முறையற்ற முறையில் கவிழ்க்கப்பட்டபோது கண்டனம் தெரிவிப்பதும், சனநாயக உரிமைகளைப் பறிக்கும் பாசிசத் தன்மையான பயங்கரவாதத் தடைச் சட்டங்களை எதிர்த்துக் குரல் எழுப்புவதும், நிலப்பிரபுத்துவக் கொடுமையால் விவசாய இயக்கத் தலைவர்கள் வெட்டிக் கொல்லப் படும்போது கண்டனத் தீர்மானம் இயற்றுவதும், ஆபாசச் சுவரொட்டிகளை எதிர்த்து ஊர்வலம் போவதும், அந்நிய மூலதனத்தின் விஷவாயுக் கொடுமையை எதிர்த்து ஆர்ப் பாட்டம் நடத்துவதும் மட்டும் அரசியலாகிவிடுமா? ஆம் எனில், ஈழக்கொடுமைகளை எதிர்த்துக் கடை அடைப்பிலும் உண்ணாவிரதத்திலும் கலந்துகொள்வதும் அரசியல்தானே? மாணவர்களிடம் சமூகப் பொறுப்பே இல்லை என அங்க லாய்க்கும் ஆவணம் (1.22) இந்த முரண்பாட்டிற்கு என்ன பதில் சொல்கிறது? அந்நிய மூலதனத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வதும் ஆபாசச் சுவரொட்டிகளைக் கிழிப்பதும் அரசியலெனில் சமூகப் பொறுப்பு என்றால் என்ன என்பதை ஆவணத்தைத் தயாரித்த அதிகாரவர்க்கம் விளக்கியாகவேண்டும்.

சமீப காலத்தில் அகில இந்திய அளவில் ஆசிரிய இயக் கங்கள் உறுதியான அமைப்புக்களை அமைத்து உரிமைக் குரல் எழுப்பி வருகின்றன. மேலும் மேலும் மாணவர்கள் இயக்க அடிப்படையில் இணைந்து சமூகப் பொறுப்புடன் கூடிய இயக்கங்களை நடத்த முன்வந்துள்ளனர். தேவை யானால் நீண்ட போராட்டம் நடத்தவும் அவர்கள் தயாராக உள்ளனர். அஸ்ஸாம் போராட்டத்தை நாம் அறிவோம். இத்தகைய போராட்டங்களும் இயக்கங்களும் ஆளும் வர்க்கத்திற்கு எதிராகவே போய்முடியும் என்பத னாலேயே இந்த ஆவணம் மிகவும் கவனத்துடன் ஆசிரியர் - மாணவர் மத்தியில் அரசியலகற்றுதல் என்கிற முழக்கத்தை மிகவும் தந்திரமாக முன்வைக்கிறது.

> "ஆசிரியர்களின் சிவில் உரிமைகளுக்கு நாங்கள் மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறோம். சமூக,

அரசியல் வாழ்வில் ஆசிரியர்கள் பங்கேற்பது மிகவும் முக்கியம் என நாங்கள் கருதுகின்றோம்.''

என கோத்தாரி தலைமையிலான கல்விக் குழுவின் பரிந்துரை (1944-66) கூறியிருப்பதையும், அகில இந்திய பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் கூட்டமைப்பு தனது கோரிக்கைகளில் ஒன்றாக வைத்திருப்பதையும் இத்துடன் இணைத்துப் பார்க்கவும் வேண்டும்.

ஆசிரியர்களின் தரத்தை உயர்த்த வேண்டும் எனவும் மறு பயிற்சிகள் அளிக்க வேண்டும் எனவும் அடிக்கடி கூறும் ஆவணம் (4. 32, 4.127, 4.128, 4.129) ஆசிரியர்களின் ஊதிய உயர்வு பற்றி கிச்சித்தும் கவலைப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் பல்கலைக் கழக அமைப்புகளுக்கு (சிண்டிகேட், செனட் போன்றவை) மேலும் மேலும் பொறுப்பாக இருக்க நேர்ந்துள்ளதையும் ஒரு அவலம்போல்(3.38) சுட்டிக் காட்டுகிறது ஆவணம். சமீப காலங்களில் சிண்டிகேட், செனட் போன்ற அவைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கைகள் அதிகமாகின்றன. முடிசூடா மன்னர் களாகத் துணை வேந்தர்கள் ஆட்சி செய்த காலம் போய் விட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் கழகங்களின் பிரதிநிதிகளின் சனநாயகப் பூர்வமான செயற்பாடுகள் அதிகார வர்க்கத்திற்குப் பெருந் தலைவலியாக இருக்கின் றன. எனவேதான் துணைவேந்தரின் உரிமைகளைப்பற்றி ஆவணம் கவலைப்படுகிற சாக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பங்கைக் குறைக்கும் வண்ணம் இந்தக் கருத்தையும் போகிற போக்கில் கூறிப் போகிறது மேலும் மேலும் ஆசிரிய, மாணவ, மக்கள் பிரதிநிதிகள் இத்தகைய அவைகளில் பங்கு பெறுதல் அதிகரிக்க வேண்டும் என்கிற கருத்து வலிவு பெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் ஆவணத் தின் இந்தக் கருத்து, அடிப்படையில் சனநாயக விரோத மானது.

இந்த ஆவணம் சொல்லியுள்ள விஷயங்கள் தவிர சொல்லாமல் தவிர்த்துள்ள விஷயங்கள் மேலும் முக்கிய மானவையாகும். இந்தியா போன்ற ஒரு பல் தேசிய இன நாட்டில் கல்வி பற்றிய எந்தக் கொள்கையும் பயில்மொழி, மொழிக்கொள்கை பற்றிய கருத்துக்களின்றி பூர்த்தியாகாது. ஆனால், இந்த ஆவணம் இவ்விரு விஷயங்கள் பற்றியும் குறிப்பிடத்தக்க மௌனம் சாதிக்கின்றது; அல்லது மிக மேலோட்டமாக அணுகுகிறது. தாய்மொழியில் கல்வி என்பது இன்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விஞ்ஞானபூர்வமான கல்விக் கொள்கையாகும். அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களில் முன்னேறியுள்ள நாடுகள் அனைத்தும் தாய்மொழியையே பயில் மொழியாகக் கொண்டுள்ளன. ஆனால் இந்தியாவில் மட்டுமே காலனிய எச்ச சொச்சங்களிலொன்றாகவும் இன்றைய அரைக் காலனியத்தின் வெளிப்பாடுகளிலொன்றாகவும் ஆங்கில மொழியில் கல்வி அதிக அளவில் பயிற்றுவிக்கப்படுகிறது. அனைவர்க்கும் கல்வி, கல்வியில் ஏற்றத் தாழ்வுகளை ஒழித்தல் ஆகியவற்றிற்கும் தாய்மொழியில் கல்வி அவசியமாகும். ஆனால் ஆவணம் முழுமையும் இந்தப் பிரச்சினை அதற்குரிய முக்கியத்துவத்துடன் அணுகப்படாததோடு, போகிற போக்கில் ஆங்கிலவழிப் பள்ளிகள் நீடிக்க வேண்டுமா வேண்டாமா என்பது விவாதத்திற்குப் பிறகு முடிவு செய்யவேண்டிய விஷயமாகும் எனக் கூறி நழுவிச் செல்வது (4.45) விஷமத் தனமானதாகும். முற்போக்கான முழக்கங்களின் பின்னணியில் ஆளும் வர்க்கத்திற்குச் சாதகமான விஷயங்களைச் சாராம்சமாக வலியுறுத்தும் இந்த ஆவணம் பயில்மொழி விஷயத்தில் இந்தத் தந்திரத்தைக் கூடக் கையாளாதது ஆளும் வர்க்கத்தின் வெளிப்படையான ஏகாதிபத்திய விசுவாசத்தையே வெளிப்படுத்துகிறது.

அதே போல, மொழிக் கொள்கை பற்றியும் குறிப்பிடத்தக்க மௌனம் சாதிக்கிறது ஆவணம். மும்மொழித் திட்டத்தை (ஆங்கிலம், இந்தி, தாய்மொழி) நிறைவேற்ற

முடியாமற் போனமைக்குப் பெருமூச்சு விடும் ஆவணம்(4.44) ''இந்தியா முழுமையும் ஒருவர் போய்வருவதற்குத்தடையாக மொழி அமைந்துவிடக் கூடாது (1.9)'' என்று பூடகமாக அறிவுறுத்துவது, இந்தி பேசாத தேசிய இனமக்கள் மத்தியில் இந்தித் திணிப்பு அச்சத்தை ஊட்டுவதாகவே அமைந் துள்ளது. இது உடனடியாக ஆசிரியர், மாணவர் மற்றும் முற்போக்கு இயக்கங்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு எதிர்த்துப் போராட வேண்டிய இன்னொரு அம்சமாகும்.

இந்தியா ஒரு பல்தேசிய இன நாடு என்கிற உண்மையை இந்த ஆவணம் முற்றாகப் புறக்கணிக்கிறது. பல்வேறு தேசிய இனங்களும், பண்பாட்டு வேறுபாடுகளும் மிக்க நமது நாட்டில் இந்த ஆவணம் வலியுறுத்துவது போல (4.46) ஒரே மாதிரியான கல்வித் திட்டம், ஒரே மாதிரியான பாடத் திட்டம் என்பதெல்லாம் எந்த அளவு சாத்தியம் என்பது சிந்திக்கப்படவேண்டும். பல் தேசிய இனங்களின் தனித்துவத்தை வலியுறுத்தாமல் தேசிய ஒருமைப்பாடு(4.43) வேற்றுமையில் ஒற்றுமை (1.9), கலாச்சார ஒருமை(1.25) முழக்கங்களை வலியுறுத்துவதென்பது, ஒருமைப்பாட் டுணர்வை ஏற்படுத்துவதற்கு மாறாக சிறு தேசிய இனங் களின் மத்தியில் ஐயத்தையும் அச்சத்தையும் வளர்க்கவே செய்யும்.

இதே போல பண்பாடு, பாரம்பரியம், விழுமியம் போன்றவற்றைக் கல்வி உயர்த்திப் பிடிக்கவேண்டும் என்கிற கருத்தும் ஆவணம் முழுமையும் ஆங்காங்கு வலியுறுத்தப் படுகின்றன (4.97, 4.15, 1.24). பண்பாடு, பாரம்பரியம் போன்றவற்றை தெளிவாக வரையறுக்காமல் ஒட்டுமொத்த மாகவும் மேலோட்டமாகவும் கூறிச் செல்வது என்பது மீண்டும் சிறுபான்மையினரிடத்தில் அச்சத்தையும், ஐயத்தையும் வளர்க்கவே செய்யும், நமது ரேடியோ, பத்திரிகை போன்ற ஆளும்வர்க்கத்திற்குச்சார்பாக இயங்கும் வெகு மக்கள் தொடர்புச் சாதனங்களில் பண்பாடு என்பது

5

இந்துப் பண்பாடாகவும், பாரம்பரியம் என்பது இந்துப் பாரம்பரியமாகவும் பொருள்கொள்ளப்பட்டுப் பரப்பப்படும் சூழலில், சிறுபான்மை மதங்களுக்கெதிராகப் பெரு மத வெறியூட்டும் மதப் புத்துயிர்ப்பு நடவடிக்கைகளில் அமைச்சர்களும் அதிகார வர்க்கமும் வெளிப்படையாகவே கலந்துகொள்ளும் காலகட்டத்தில் மேற்குறிப்பிட்ட விளக்க மற்ற முழக்கங்கள் என்பன மதச் சார்பிற்கு வித்திடும் என்கிற அச்சத்திற்கு அப்பாற்பட்டதாக இல்லை.

இந்த ஆவணம் வலியுறுத்தும் இன்னொரு கருத்து, வேலை உரிமையையும் கல்வியையும் பிரிக்கவேண்டும் (3.62, 4,28) என்பதாகும். ஏற்கனவே இவ்விரண்டும் மக்களால் எதார்த்தத்தில் பிரித்தே அறியப்படுகிறது. படித்தவர்கள் எல்லோருக்கும் வேலை இல்லை என்கிற நிலையில், பல்கலைக்கழகப் பட்டங்களைப்பற்றி வேலை கொடுப்போர் கிஞ்சித்தும் கவலைப்படாமல் தாங்களே தேர்வுகள் நடத்தும் சூழலில் இவ் ஆவணம் இவ்வாறு வலியுறுத்துவதென்பது படித்துவிட்டு வேலையின்றி வீதியில் அலையும் எண்ணற்ற இளைஞர்களுக்கு வேலை அளிக்கும் பொறுப்பிலிருந்து தட்டிக் கழித்து நழுவிச்செல்லும் முயற்சியேயன்றி பிரி தொன்றுமில்லை. வேலையில்லா பட்டதாரிகள் மத்தியில் அதிருப்தி வளர்ந்துள்ள சூழலில் படிப்பிற்கும் வேலை வாய்ப்பிற்கும் தொடர்பில்லை என்கிற பண்பாட்டு மதிப்பீட்டை உருவாக்கும் முயற்சியே இது.

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும்போது இன்று ஆர்ப்பாட்டமான விளம்பரங்களுடன் அரங்கேற்றப்படும் புதியகல்விக்கொள்கை என்பது எந்தவிதமான உருப்படியான முற்போக்கான திட்டங்களையும் முன்வைக்காமல் இருக்கிற, உரிமையினைப் பறித்திருக்கிற ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கும் பிற்போக்குத்தனமான ஒரு கல்வித்திட்டமே யாகும் என்பது தெளிவு. கல்வியிலும் சமுதாயத்திலும் அக்கறையுள்ள எவரும் இதில் ஆபத்தான கூறுகளைச் சுட்டிக்காட்டுவதும் எதிர்த்துப் போராடுவதும் அவசியம் ●

II

புதிய கல்விக் கொள்கையின் அவசரமும் அவசியமும்

தான் உலக மாயைகளிலிருந்து விடுபட்டுத் தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகித் தேர்ந்த கதையை மாணிக்கவாசகர்,

ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையில் பிழைத்தும்
பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறு எனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்
நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்
புல் வரம்பு ஆய பல்துறை பிழைத்தும்
தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி

(போற்றித் திரு அகவல் - தில்லை)

என்று விவரிப்பார். தெய்வச் சித்தத்தைத் தடுப்பவற்றுள் இளமுலை மாதர்தம் கூர்த்த நயனக் கொள்ளை, மத்தக் களிறொத்த அவா, செல்வம் என்னும் அல்லல், நல்குரவு என்னும் தொல்விடம் ஆகிய மாயைகளுடன் சமமாகக் கல்வி என்னும் பல்கடலையும் அடிகள் குறிப்பிடுவது நமக்கு வியப்பாக இருக்கிறது. ''திருவாசகத்திற்கு உருகாதோர் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' எனப் புகழ்பெற்ற மணிவாசக அடிகள், தான் கல்வி என்னும் பல்கடலிலிருந்து தப்பி வந்ததாகக் குறிப்பிடுவது முரண்பாடாகவும் தோன்று கிறது.

ஆனால் ஆழ்ந்து சிந்திக்கையில் இதில் முரண்பாடேதுமில்லை என்பது தெளிவாகிறது. உருகாத உள்ளத்தையெல்லாம் உருக்கும் திருவாசகத்தைப் படைக்கும் ஆற்றலைத் தந்த கல்வியையும், தெய்வச் சித்தத்தைத் தடுத்து நிறுத்தும் ஆற்றலை அளிக்கும் கல்வியையும் அடிகள் வேறுபடுத்திப் பார்த்ததுபோல நாமும் வேறுபடுத்திப் பார்த்தல் அவசியம்.

ஆம். வர்க்கமாய்ப் பிளவுண்ட சமுதாயங்களில் எல்லாவற்றிலும் இரண்டிருப்பதுபோலவே கல்வியும் இரண்டாக உள்ளது. ஆளும் வர்க்கம் தனது நிறுவனங்கள் மூலமாகத் தனது குடிமக்களிடம் திணிக்கும் கல்வி ஒன்று. இதுவே மணிவாசகப் பெருமானை உருவாக்கிய கல்வி. தெய்வம் போன்ற கருத்துருவங்களைக் கேள்விக்குள்ளாக்கும் கல்வி மற்றது. இதுவே உண்மைக் கல்வியும் கூட. இன்றைய சூழலில் இந்த இரண்டிற்கும் அடிப்படைத் திறவுகோலாக இருப்பது எழுத்தறிவு. அன்ன சத்திரம்,ஆலயம் போன்றவற்றை நிறுவுவதைக் காட்டிலும் புண்ணியமிக்க தருமச் செயலாகப் பாரதியால் போற்றப்படும் எழுத்தறிவித்தல் என்பது இந்தத் திறவுகோலைக் கரங்களில் அளிப்பதுதான்.

வர்க்கங்களுக்கு முற்பட்ட புராதனக் கூட்டுடமைச் சமுதாயங்களில் கல்வி என்பது தனி நிறுவனமாக வளர்ந்திருக்கவில்லை. மனிதன் சமுதாயத்தின் ஓர் உறுப்பினன் என்கிற வகையில் சமுதாய நடவடிக்கைகளில் பங்குபெறும் செயற்பாடுகளினூடே அன்றைக்குத் தேவையான கல்வியைப் பெற்றுக் கொண்டான். எல்லாவற்றிலும் வேலைப் பிரிவினைகள் இல்லாததைப் போலவே கற்பித்தல், கற்றுக்கொள்ளல் என்கிற வேலைப் பிரிவினையும் இல்லாதிருந்தது. வேலைப்பிரிவினை, தனிச் சொத்து, வர்க்கங்கள் ஆகியவற்றின் தோற்றத்திற்குப்பின் கல்வி என்பது உற்பத்திக்கான உழைப்பு நடவடிக்கைகளிலிருந்து பிரிக்கப்பட்டது.

அருவமாகப் போதிக்கப்பட்டது. கற்பிக்கும் ஆசிரியன் ஆறும் வர்க்கத்தின் அங்கத்தவனானான். கல்வி ஆளும் வர்க்கத்தின் நிறுவனமாகியது.

வர்க்கமாய்ப் பிளவுண்ட சமுதாயங்களில், வர்க்கங்களுக்கிடையேயான முரண்பாடுகளின் விளைவாக அரசு உருவாகிறது. இந்த அரசின் அடக்குமுறைக் கருவிகள் இரு வகைப் பட்டன. படை, அதிகாரவர்க்கம், நீதி நிறுவனம் போன்ற நேரடியான அடக்குமுறைக் கருவி முதல்வகைப் பட்டது. மற்றது, கருத்து நிலை அரசுகருவி (Ideological State Apparatus). இதன் ஓரங்மாகக் கல்வி காலங்காலமாக ஆளும் வர்க்கத்திற்குச் சேவை செய்து வந்துள்ளது. இதனை

> அரசால் நிறைவேற்றப்பட்ட உண்மையான ''பொதுக்'' கல்வி என்பது அரசின் நியாயமான பொது இருத்தலில் அடங்கியுள்ளது. மக்களைத் தனது உறுப்பினர்களாக ஆக்கிக் கொள்வதன் மூலமும், தனிநபர் குறிகோள்களைப் பொதுக் குறிக்கோள்களாக மாற்றுவதன் மூலமும், திருத்தப் படாத அகத் தூண்டல்களை ஒழுக்க ஆர்வமாக மாற்றுவதன் மூலமும், இயற்கையான சுதந்திரத்தை ஆன்மீக விடுதலையாக ஆக்குவதன் மூலமும், தனிநபர் தனது முழுமையை மொத்தத்தில் காண வைப்பதின் மூலமும், தனிநபரின் மன எல்லைக்குள் முழுமையைக்காண வைப்பதன் மூலமும் அரசு தனது உறுப்பினர்களுக்குக் கல்வி புகட்டுகிறது,

(Marx—Engels, Collected works.vol. I p. 193)

என்பார் பேராசான் மார்க்ஸ். புரட்சிக்குப் பிந்திய சோவியத் ஒன்றியத்தில் கல்வி நிர்மானப் பணியை மேற்கொண்டிருந்த அனதோலி லூனா சார்ஸ்கி

ஒரு வர்க்க சமுதாயத்தின் குறிக்கோள்களுக்குப் பொருந்துகிறவாறு வெகுமக்களின் உளவியலைச் சரிசெய்கிற கருவியாகவே கல்வி என்பது அரசு நடவடிக்கைகளில் ஒன்றாக எப்போதுமே இருந்து வந்திருக்கிறது.

(A Luna chansky, on Education p. 54)

என்று கூறுவதும் இதையேதான்,

இந்தக் கல்வியையுங்கூட முதலாளியத்திற்கு முற்பட்ட சமுதாயங்களில் அனைத்து மக்களும் பெறுகிற உரிமை மறுக்கப் பட்டிருந்தது. உடலுழைப்பில் ஈடுபட்ட அடித் தட்டு மக்கள் தங்கள் தொழிலுக்குத் தேவையான திறனை மட்டும் தங்களின் உழைப்புப் போக்கில் கற்றுக் கொண்ட னர். இதர இயற்கை அறிவியல்கள், தத்துவம், ஆன்மீகம் தொடர்பான முறையான கல்வி என்பது அடிப்படை வர்க் கத்திற்கு மறுக்கப்பட்டது, அல்லது பழமொழிகள், கதைகள், நாட்டுக்கலை வடிவங்கள் மூலமாக முறை சாராத வகை யில் தப்புந் தவறுமாகப் போதிக்கப்பட்டது. இதுவுங்கூட எளிதில் திருத்தியமைக்கக் கூடிய அகவயக் கூறுகள் அதிகம் கொண்ட சமயம், தத்துவம் போன்ற துறைகளால்தான் சாத்தியமானதே யொழிய புறவயமான இயற்கை அறிவி யல் துறைகள் அடிப்படை வர்க்கத்திற்கு அறிமுகப் படுத்தப் படவேயில்லை. எப்படியோ இந்த இரண்டாம் பட்சமான போதனையுங்கூட அன்றைய கருத்துநிலைசார்ந்த அரசு கருவியின் ஓரங்கமாகவே அமைந்தது.

முதலாளியச் சமுதாயத்தின் தோற்றத்திற்குப் பின்பே கல்வி என்பது வெகுமக்கள் அளவில் பொதுவாக்கப்பட்டது அரசு நேரடி நிர்வாகங்களில் ஒன்றாகவே கல்விப் பொறுப்பை ஏற்று வெகுமக்கள் கல்விக் கூடங்களை நிறுவி யது. முதலாளியத்தோடு பரவலாக நடைமுறைக்கு வந்து சனநாயகத்தின் தோற்றத்தோடு இதனை இணைத்துப்

பார்ப்பது அவசியம். ஆனால் பெயரளவில் கல்வி இவ்வாறு பரவலாக்கப் பட்டாலும் தொடர்ந்து அடிப்படை வர்க்கத்திற்கு அது எட்டாக் கனியாகவே இருந்து வந்தது. எந்திர உற்பத்தி என்பது பொருளுற்பத்திக்கு அடிப்படையான கூட்டு உழைப்பை (Compound Labour) நீக்கி எளிய உழைப்பு (Simple Labour) போதுமென்றாக்கியது' குழந்தை உழைப்பே உற்பத்திக்குப் போதுமெனவும், உற்பத்திக்கு அடிப்படைக் கல்வி அதிகம் தேவையில்லை எனவும் ஆக்கியது. அடிப்படை வர்க்கக் குழந்தைக ளெல்லாம் பள்ளிக்குச் செல்வதற்குப் பதிலாகத் தொழிற் சாலைகளுக்குச் செல்லத் தொடங்கின. இந்தியாவில் காலனிய ஆட்சிக்குப் பின்னரே கல்வி என்பது வெகு மக்களை விலாக்கப்பட்டது.அதற்குமுன் சிறுசிறு திண்ணைப் பள்ளிக் கூடங்களில் மேல்தட்டு வட்டத்திற்குள்ளேயே முடங்கியிருந்தது.

பல்வேறு சமூகப் பொருளாதார வளர்ச்சியினூடே இன்னுங்கூட கல்வி என்பது அடிப்படை வர்க்கத்திற்கு எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது என்பதை பு.க.கொ. ஆவணமே ஏற்றுக் கொள்கிறது. கல்லாமை, இடையில் நிறுத்துதல் போன்றவை யெல்லாம் அடிப்படை வர்க்கத் திடமே அதிகமாக உள்ளன என்கிற உண்மை இதனையே பறைசாற்றுகிறது.

எட்டாக் கனியாகவே கல்வி இருந்துவந்ததென்றாலும் அது எட்டுகிற அளவில் ஆளும் வர்க்கத்தின் கருத்து நிலை அரசு கருவி என்கிற பணியை அவ்வக் காலத்தில் செவ்வனே நிறைவேற்றியது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் பணிவாசகர் பல்கடலென ஒதுக்கும் உண்மைக் கல்வி ஆளும் வர்ககத்தால் முற்றாக மறைக்கப்பட்டே வந்ததெனலாம். ஆளும் வர்க்கம் தனது நிறுவனங்களின் மூலமாக போதித்து வந்துள்ள கல்வி அவ்வக்கால சமூகப் பொருளாதார

நிறுவனங்களுக்கேற்ற உளவியற் சூழலை உருவாக்கும் பணியை அவ்வக் காலங்களில் நிறைவேற்றி வந்திருக்கிறது. சமூகப் பொருளாதார வளர்ச்சியினூடாகக் கல்விக் கொள்கைகளும் மாறி வந்துள்ளன.

பண்டைய கிரேக்க 'சனநாயக' அரசமைப்பிற்கு (அடிமைகளைத் தவிர்த்த அன்றைய சனநாயகம்) ஏற்ற சமத்துவத் சூழலுக்குப் பொருந்துகிற ஒரு கல்விக் கொள்கை அன்று நிலவியது. சமூகத்தின் மூலமான, சமூகத்திற்கான கல்வியாக அது இருந்தது. உடலும் அறிவும் ஒத்திசைந்து வளர்ச்சியுற்ற உறுதியும் திறமையுமிக்க, சமூகத்திற்கு மேலான தனிச் சிறப்புத் தன்மையற்ற குடிமகன்களை உருவாக்குவதென்பது அன்றைய கல்விக் கொள்கையாக இருந்தது.

மத்திய கால் நிலமான்யச் சமுதாயத்தில் படி நிலைக் கட்டுமானத்திற்கு விசுவாசமிக்க உறுப்பினர்களை உருவாக்கும் பணியை அன்றைய மத நிறுவனங்கள் ஏற்றுக் கொண்டன.

போட்டியின் அடிப்படையிலான முதலாளியச் சமுதாயத்தில் தனித்துவமிக்க சிறப்பாளர்களை உருவாக்குவதென்பது கல்விக் கொள்கையாகியது. சிறப்பு நிபுணத்துவம் (Specialisation) முக்கியத்துவம் பெற்றது.

புதிய சமூக உருவாக்கம நிகழும்போது மட்டுமே அதற்குப் பொருத்தமான புதிய சமூக உளவியலை உருவாக்கும் புதிய கல்விக் கொள்கை உருவாகுமென்பதில்லை. நிலவுகிற சமூக அமைப்பிலேயே சிக்கல்களும் நெருக்கடிகளும் அதிகமாகி சமூக அழுத்தம் மிகுபபோது அமைப்பைச் சமநிலை குறையாமல் காக்க சமூக உளவியலைத் திருத்த வேண்டிய அவசியம் ஆளும் வர்க்கத்திற்கு ஏற்படுகிறது. இதற்கான பல்வேறு வழிமுறைகளில் கல்விக் கொள்கைகளில் சிறு திருத்தங்கள் செய்து புதிய கல்விக் கொள்கையாக அரங்கேற்றுவதும் ஒன்று.

முதலாளியச் சமூக அமைப்பு ஏகாதிபத்தியங்களின் சந்தைக்கான போட்டிக் களமாக மாறியபோது 'தாயகத்தைக் காப்போம்' போன்ற கவர்ச்சியான முழக்கங்களுடன் அரசுக்காக உயிரையும் விடுகிற விசுவாசமிக்க உறுப்பினர்களை உற்பத்திசெய்கிற 'சிவிக் கல்வி (civic education)' போன்ற கல்விக் கொள்கைகளை பிராடரிக் பார்ஸ்டர் போன்றோர் முன் வைத்தனர். ஆனால் அரசின் உண்மையான உருவத்தை விளங்கிக் கொள்ளும் எவனும் அரசைப் போற்றமாட்டான், அரசுக்கு விசுவாசமாக இருக்க மாட்டான் என்பது உறுதி. எனவே கடவுள், சொர்க்கம், நரகம், மதம், பாரம்பரியம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் கல்வியில் ஒருவித மர்மப் பண்பை ஊட்டும் (Mysticism) தன்மை சிவிக் கல்வியுடன் இணைக்கப்பட்டது.

மெக்காலே அறிமுகப்படுத்திய ஆங்கிலக் கல்வியைக் கூட குமாஸ்தாக்களை உருவாக்கும் கல்வி என இயந்திர கதியில் விமர்சித்தொதுக்காமல், காலனிய ஆட்சியின் விளைவாக உருவான புதிய முரண்பாடுகள், நெருக்கடிகள், சமூக அழுத்தங்கள் ஆகியவற்றைச் சமனப்படுத்தும் கருத்து நிலைசார்ந்த அரசுக் கருவியாக மெக்காலேயின் கல்விக் கொள்கை எவ்வாறு செயற்பட்டது என்பதைப் பார்ப்பது மேலும் பல சிக்கல்களை விளங்கிக்கொள்ள உதவும்.

☆ ○ ☆

இன்று நாட்டில் முற்றியுள்ள நெருக்கடிகள், சிக்கல்கள் வெளிப்படை. வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் வேறெப்போதைக் காட்டிலும் உச்சமாகியுள்ளன. தேசிய இன ஒடுக்கு முறைக் கெதிரான எதிர்ப்புக் குரல்கள் உரக்கத் தொடங்கியுள்ளன. பாசிசத்தையும், அடக்குமுறைச் சட்டங்களையும் மீறி மக்கள் போராட்டங்களுக்குத் தொடங்கியுள்ளன.

6

இன்னொரு பக்கம் ராணுவம், அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் இங்கு சமூக ஏகாதிபத்தியம் உள்ளிட்ட ஏகாதிபத்தியங்களின் இடுக்கிப் பிடிகள் அதிகமாகியுள்ளன. தேசியத் தொழில் வளர்ச்சி முடக்கப்படுவதும், வேலையில்லாத் திண்டாட்டம் உயர்வதும், பஸ் கட்டண உயர்வு போன்ற அன்றாடப் பிரச்சினைகளும் இதன் விளைவுகளாகியுள்ளன. இன்னொரு புறம் நிலப்பிரபுத்துவக் கொடுமைகளும் அதன் பண்பாட்டு ஆதிக்கங்களும் அதிகமாகிக்கொண்டே போகின்றன. புதிய புதிய சாமியார்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றனர். மத மீட்பு இயக்கங்கள் புத்துயிர்ப்புப் பெறுகின்றன. இதன் விளைவாக இட ஒதுக்கீட்டு எதிர்ப்புக் கலவரங்களும், சாதி மதச் சண்டைகளும் பெருகுகின்றன.

மொத்தத்தில் சமூக நெருக்கடிகளும் சமூக அழுத்தங்களும் அதிகமாகியுள்ளன. அடக்குமுறைச் சட்டங்களை இயற்றியும், ராணுவம், போலீஸ் ஆகியவற்றை வலுப்படுத்தியும், அதிகார வர்க்கத்தை விரிவாக்கியும் இதர கருத்தியல் நடவடிக்கைகள் மூலமாகவும் இந்தச் சூழலை அரசு எதிர்கொள்கிறது, இத்தகைய கருத்துநிலை சார்ந்த அரசு நடவடிக்கைகளில் ஒன்றுதான் புதிய கல்விக் கொள்கை.

சிதைவுப்போக்கைத் தடுப்பதும் சகிப்புத்தன்மையையும் கூட்டுறவையும் வளர்ப்பதுமே தனது குறிக்கோள் எனக் கூறும் இந்த ஆவணம்,

> "இத்தகைய அக, புறச் சவால்களை இந்நாடு வெற்றிகரமாகச் சந்திக்கப் போகிறதா என்பது நாளைய குடிமக்களாலேயே தீர்மானிக்கப்படும் இந்தச் சவால்களைச் சந்திக்கும் திறன் வாய்ந்த கருவி கல்வியே யாகும்." (1, 2)

என்றும்,

"இருக்கும் நிலையைத் தக்க வைத்தல் என்பதைக் காட்டிலும் மாற்றம் என்பதே வெற்றிகரமான வாழ்வின் முழக்கமாகிவிட்டது''.

மாற்றங்களை அமைதியான முறையில் இட்டுச் செல்லும் கருவியாகக் கல்வியே கருதப்படுகிறது. (1, 6, அழுத்தம் நம்முடையது)

என்றும் கூறும்போதும் இந்த உண்மை அப்பட்டமாகிறது.

இன்றைய கல்வி இழிவுகளுக்குக் காரணமான ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதில் எள்ளளவும் அக்கறை காட்டாமல் கல்வியையும் வேலை வாய்ப்பையும் துண்டித்தல்: தனியார் மூலதனங்களைக் கல்வித் துறையில் ஊக்குவித்தல்; தொழில் சார் கல்வி, முறை சாராக் கல்வி, கருவிகள் மூலம் கல்வி போன்றவற்றை விரிவாக்குதல்; ஆசிரியர், மாணவர் மத்தியில் அரசியலகற்றுதல்; தேசிய ஒருமைப் பாட்டை வலியுறுத்தல். இந்தியா முழுமைக்குமாக ஒரே பாடத்திட்டம்; பாரம்பரியம்; விழுமியங்கள் ஆகியவற்றை உயர்த்திப் பிடித்தல் போன்ற முழக்கங்களுடன் புதிய வடிவிலான கருத்தியல் அரசுக் கருவியாக புதிய கல்விக் கொள்கை அறிமுகப் படுத்துவதன் பின்னணி இதுதான்.

மக்களுக்கு அரசின் மீது நம்பிக்கையற்ற சூழலில் அரசு உருவாக்கும் கல்விக் கொள்கையில் மதம், பாரம்பரியம் போன்றவற்றின் மூலம் மர்மப்பண்பு ஏற்றப்பட்டு அடக்கு முறை கருத்தியல் ரீதியாக நடைமுறைப் படுத்தப்படும் என்கிறோம். இன்றைய சூழலில் தன்னை மதம் சாராத நாடு என அறிவித்துக்கொள்ளும் ஒரு நாட்டில் இதனை வெளிப்படையாக நிறைவேற்ற முடியாது என்பது வெளிப் படை, எனவேதான் பாரம்பரியம், விழுமியங்கள், தேசிய ஒருமைப்பாடு என்கிற பெயர்களில் இது நிறைவேற்றப் படுகிறது.

கருத்தியல் நடவடிக்கைகளில் வன்முறையும், வன்முறை நடவடிக்கைகளில் கருத்தியலாதிக்கமும் இணைந்தே செயற்படும் என்பார் அல்துஸ்ஸர். இந்தக் கல்விக்கோட்பாட்டின் சாராம்சங்களை நிறைவேற்றத் தேவையானால் சட்டங்களைத் திருத்தவும் தயங்கமாட்டோம் என்பன போன்ற மிரட்டல்கள் அரசியலகற்றுதல், தேசிய ஒருமைப்பாடு, பாரம்பரியம்போன்ற முழக்கங்களினூடாக வெளிப்படுவதும் கவனத்திற்குரியது.

III

எனவே

அந்நிய மூலதனப் பிடியிலிருந்தும் நிலப் பிரபுத்துவ ஆதிக்கத்திலிருந்தும் நமது நாட்டை விடுவித்துத் தேசிய தொழில் வளர்ச்சியையும், நிலச் சீர்திருத்தத்தையும் நிறைவேற்றினாலொழிய கல்வியில் இன்று காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், சனாதன உள்ளடக்கம் போன்றவற்றை நீக்க இயலாது. இவற்றை இப்படியே வைத்துக் கொண்டு தொழில்சார் கல்வி, பாரம்பரியங்களின் மீது மதிப் பூட்டும் கல்வி, மனித உழைப்பை மேம்படுத்தும் கல்வி, முறைசாரக் கல்வி, நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை போதனைக்குப் பின் பயன்படுத்தும் கல்வி என்றெல்லாம் முழக்கங்கள் எழுப்புவதென்பது இருக்கிற ஏற்றத் தாழ்வுகளை மிகுதியாக்கவே பயன்படும். புதிய கல்விக் கொள்கை முன்வைக்கும் இதர கோரிக்கைகளும் இந்த நோக்கத்தை வலியுறுத்துவனவாகவே உள்ளன. கல்வியில் தனியார் ஆதிக்கங்களை ஊக்குவித்தல், தேசிய ஒருமைப் பாடு என்ற பெயரில் இந்தித் திணிப்பை மறைமுகமாக வலியுறுத்தல், பயில்மொழியாக ஆங்கிலம் நீடிப்பதற்கு வாய்ப்பளிப்பதன் மூலம் எஜமான விசுவாசத்தை வெளிப்படுத்தல், கிராமப்புறக் கல்வியில் சமுதாயக் கட்டுப் பாடு, மாவட்ட மாதிரிப் பள்ளிகள் என்கிற பெயரில் நிலப் பிரபுத்துவ ஆதிக்கத்தைக் கல்வியில் அதிகப்படுத்தல் பாரம்பரியம் பண்பாடு என்கிற பெயர்களில் நிலப் பிரபுத்துவப் பிற்போக்குக் கருத்துக்களைக் கல்வியில் திணித்தல் ஆகியவற்றையே இந்தப்புதிய கல்விக் கொள்கை யின் விளைவுகளாக அமையும்

மொத்ததில்அந்நிய மூலதனஆதிக்கப், நிலப்பிரபுத்துவம் அதிகாரவர்க்கம் ஆகியவற்றிற்குச் சாதகமான ஒரு கல்வித் திட்டமாகவே புதிய கல்விக் கொள்கை அமைந்துள்ளது. இன்று நாட்டில் நெருக்கடிகளும், மக்கள் போராட்டங் களும் அதிகரித்துள்ளன, இதன் விளைவாக உருவாகியுள்ள சமூக அழுத்தத்தைச் சமநிலைப்படுத்த கருத்தியல் ரீதியான அரசு நடவடிக்கைகளில் ஒன்றாக இன்று புதிய கல்விக் கொள்கை அறிமுகப் படுத்தப்படுகின்றது. இது அடிப்படை யாக ஆசிரிய—மாணவ எதிர்ப்பு உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது. அரசியலகற்றுதல் என்ற பெயரில் அதிகாரங்களைக் குவித்துக்கொள்ளும் தவறான நோக்கங் களை உள்ளடக்கியுள்ளது. ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சனநாயக ஆர்வமுள்ள முற்போக்குச் சக்திகள் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்புக் குரலெழுப்ப வேண்டிய பல்வேறு அம்சங்களைக் கொண்டுள்ள கல்விக் கோட்பாடிது.

அந்நிய மூலதனத்தை ஒழித்து நிலச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதன் மூலமே இங்கு சனநாயகத்தையும் சரியான வடிவமும் உள்ளடக்கமுமுள்ள கல்வியையும் நிறைவேற்றமுடியும், என்றாலும் புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் ஆதிக்கச் சக்திகளுக்குச் சாதகமான ஒரு கல்விக் கொள்கை திணிக்கப்படும் இந்நேரத்தில் இதனை விமர்சிப்பதன் மூலமாகவும் சனநாயகப் போராட்டத்தின் ஒரங்கமாகவும் கீழ்க்கண்ட முழக்கங்களை முன் வைப்பது அவசியமாகத் தோன்றுகின்றது.

* கல்வியைச் சனநாயகப் படுத்துவோம். தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகங்கள் வரை திட்டமிடுவதிலும் அமுல்படுத்துவதிலும் ஆசிரியர், மாணவர் பொதுமக்களின் பங்கை ஆதரிப்போம்.

* கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்போம். ஆரம்பக்கல்விக்கு முக்கியத்துவம் அளிப்போம்.

* கல்வியில் தனியார் ஆதிக்கத்தை முற்றாக ஒழிப்போம். சிறுபான்மை மதத்தினரின் சிறப்புரிமையைக் கல்வி விஷயத்தில் நீக்குவோம். நர்சரி கான்வென்ட் பள்ளிகளிலும் தனியார் ஆதிக்கத்தை ஒழிப்போம்.

* வேலை பெறும் உரிமையை வலியுறுத்துவோம்.

* தொடக்கக் கல்வி முதல் பல்கலைக் கல்வி வரை தாய்மொழியையே பயில்மொழியாக்குவோம்.

* இந்தியா என்னும் பல்தேசிய இன நாட்டில் தேசிய இனங்களின் தனித் தன்மையை வலியுறுத்தும் கல்வியை வலியுறுத்துவோம்.

* கல்வியில் விஞ்ஞானபூர்வமான உள்ளடக்கத்திற்காகப் போராடுவோம்.

* ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அரசியல், சிவில் உரிமைகளை வழங்குவோம்.

* தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கல்வி வரை இலவசமாக்குவோம். நன்கொடைகளை ஒழிப்போம்.

* அனைத்து மட்டங்களிலும் ஆசிரியர்களின் ஊதியங்களை அதிகரிப்போம்.

* தாழ்நிலை மக்கள் முழுக் கல்வி உரிமையும் பெற உழுபவனுக்கே நிலம் என்கிற அடிப்படையில் நிலச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவோம்.

* கல்வியில் அந்நிய ஆதிக்கத்தை அகற்றுவதற்கும் வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற் கல்வி பெருகுவதற்குமேற்ற தேசியத் தொழில் வளர்ச்சி பெருகுவதற்கும் நமது நாட்டின் பொருளாதார, அரசியல், ராணுவ, பண்பாட்டுத் துறைகளின் மீதுள்ள அந்நிய ஆதிக்கத்தை அகற்றுவோம். ●

இந்நூலில் கையாளப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் கீழ்க்கண்ட கட்டுரைகள் மற்றும் நூல்களிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.

1. Challenge of Education - a policy perspective, Ministry of Education, New Delhi, Aug' 85
2. Investment in Education as an industry, Jandhyala. B. G, Tilak, Eastern Economist, Annual Number 1980.
3. Education in five year plans, Jandhyala, B. G. Tilak Eastern Economist, April 15, 1977.
4. Report of the Education commission (1966) ; Education And National Development, Ministry of Education, New Delhi
5. New Education Policy - Promises, Promises, Promises, Dinesh Mohan, Economic And Political weekly Sep. 21, 1985
6. Education And the Social order - Book Review, S. Shukla, Economic And Political weekly, Aug 17' 1985
7. ....John kurien, Economic And Political weekly, oct 3, 1981
8. Employment And Educational Planning, N. G, Bodar Social Scientist Jan 1973
9. Trends in Educational Expenditure, The Ministry of Education and Social Welfare, Economic and Political Weekly, Aug, 29, 1981
10. Social problems and Social Disorganisation in India, C. B. Marmoria Kirabmahal, Allahabad, 1981.
11. On Education, Anatoli Luna Charsky, Progress, Moscow, 1981.
12. On Education, Marks and Engels, APRSU Publication, 1985.

ஆசிரியரின் இதர நூல்கள்

எண்	நூல்	ஆசிரியர்	வெளியீடு	விலை
1.	பாரதி ஒரு சமூகவியல் பார்வை	பெ. மணியரசன் - மா. வளவன்	கார்க்கி நூலகம்	10 - 00
2.	சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள்	அ. மார்க்ஸ்	சிலிக்குயில்	5 - 00
3.	மார்க்சீய இலக்கியக் கொள்கை	Dr. மோகன் தம்பி (தமிழாக்கம் அ.மா)	சிலிக்குயில்	4—00
4.	உதிர்க்கப்போவது எதனை ?	அ. மார்க்ஸ்	கைலாசபதி இலக்கிய வட்டம்	1—00
5.	பாரதி மறைவு முதல் மகாகவி வரை	கா. சிவத்தம்பி-அ மார்க்ஸ்	என் சி.பி ஹெச்	15—00
6.	எது கவிதை ?	அ மார்க்ஸ்	இராதா பதிப்பகம்	5—00
7.	தத்துவமும் இலக்கியமும் [நவீன இலக்கியப் படைப்புக்கள் மற்றும் தத்துவப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள்]	,,	,,	(அச்சில்)
8.	தொடக்க காலத் தமிழ்ச் சமூக உருவாக்கத்தில் சில அமிசங்கள் [6-ம் நூற்றாண்டு வரை]	அ மார்க்ஸ்	இனி வர இருப்பது.....	

வெளியான ஆய்வுகள்

	கட்டுரை		இதழ்கள்
1.	நலிவாரும் - மெலிவாரும் சேக்கிழாரும் (சேக்கிழார் காலச் சமூக உருவாக்கமும் பெரிய புராண ஆக்கமும் பற்றிய ஓர் ஆய்வு)	அ. மார்க்ஸ் - பொ. வேல்சாமி	தாமரை - புலமை
2.	மணிக்கொடியின் பரிணாமம்	அ. மார்க்ஸ்	முனைவன் மணிக்கொடி மலர்

சில முக்கியமான பிழைகளுக்கான திருத்தங்கள் மட்டும்......

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
16	1	தொழில்சார் கல்வியும்	உடல் உழைப்பிற்குத் தொழில்சார் கல்வியும்
19	22	என்று	ஒன்று
19	25	கனாகும்	களாகும்
21	17	நிறைவேற்றப்	நிறைவேற்றப் பயன்
22	8	52 லட்சம்	22 லட்சம்
24	5	செல்வாக்குகள்	இவர்களது செல்வாக்குகள்
24	28	அவரது தாலியை	அவரது மனைவியின் தாலியை
25	21	அரசு	அரசால்
26	28	காலான்கள்	காளான்கள்
27	7	செப்டம்பர் 6,	செப்டம்பர் 6, 1984.
27	19	வலியுறுத்தும்	வலியுறுத்தும் போக்கு
28	27	பட்ட	படாத

29	6	அழிவுகளுக்கு	இழிவுகளுக்கு
29	7	காட்டப்பட்டுள்ளது	காட்டுகிறது
31	6	ஒன்றாக	ஒன்றாக இதனை
31	11	கிச்சித்தும்	கிஞ்சித்தும்
33	17	ஒருமை (1·5)	ஒருமை (1·5) போன்ற
37	2	ஆறும்	ஆளும்
37	28	நிர்மானப்	நிர்மாணப்
39	13	மக்களை விலாக்கப்பட்டது	மக்களளவிலாக்கப்பட்டது
39	27	பணிவாசகர்	மணிவாசகர்
40	2	காலங்கனில்	காலங்களில்
41	29	போராட்டங்களுக்கப்	போராட்டங்கள் வலுக்கத்
45	10	போதனைக்குப் பின்	போதனைக்குப்
45	24	ஆகியவற்றையே	ஆகியவையே
45	24	கவவிக்	கல்விக்
46	30	ஆதரிப்போம்	அதிகரிப்போம்

எமது இதர வெளியீடுகள்

ஆவணக் காப்பக நூலகம்
134381.
சென்னை-600 [illegible]

[illegible]

1. [illegible] 10—00

சிலிக்குயில்

2. சிலிக்குயிலுக்கு ஓர் செங்கவிதாஞ்சலி (An anthology on Neruda) 3—60
3. இலங்கையிலிருந்து ஓர் இலக்கியக் குரல் —கே. டானியல் 3—00
4. யமன் —சேரன் கவிதைகள் 5—00

தோழமை

5. அடிமைகள் (மக்கள் பதிப்பு) —கே. டானியல் 16—00
6. கதைப் பாடல்களும் சமூகமும்—கோ. கேசவன் 9—00

இனிவர இருப்பவை :

1. ரஷ்யக் கரடியின் இன்னொரு முகம் —ராசன் (ஓர் ஆலைத் தொழிலாளியின் பார்வையில் குருஷேவ் முதல் கோர்ப்பசேவ கும்பல் வரை)
2. மூன்றாவது பாதை —ஜமாலன் கவிதைகள்
3. சூரிய பௌர்ணமி —பொதியவெற்பன் கவிதைகள்
4. இனிமேல் இதுதான் —பாமணி கதைகள்
5. மார்க்சியமும் இலக்கிய விமர்சனமும் —டெர்ரி ஈகிள்டன் தமிழாக்கம்: சிவசு

தொடர்பு முகவரி :

வே மு. பொதியவெற்பன்

20, கோதண்டபாணித் தெரு

குடந்தை - 612 001.

0-,6x N85

மேஸ்திரிகள்

பல்கலைக் கழகத்தின்
முன்னொரு தோட்டம்
தீட்டினார் மேஸ்திரி
அதி அற்புதத் திட்டம்

திட்டம் விளைந்தது
தோட்டம் மறைந்தது
காட்சி தந்தது
மிருகக் காட்சி சாலை

தோட்டத்தில் மேஸ்திரி ஒருவரே
எண்ணத் தொலையுமோ உள்ளே ?

- பசுவய்யா